


# உதயன்

The UDHAYAN

Tooty Fruity
Wholesale & Retail
So Come and try the taste of kerala with us! where quality comes first
31 Salem Place Croydon Surrey CR0 1AQ
Tel: 0181 686 4152
07715333328
Fax: 0181 686 4152
0181 646 8661

ஆசிரியர்: JAYAPALAN    UN9 Thursday, 13th January, 2000    For Advertisements - 0181 952 5677

# 2000தில் முதலாவதாக திறக்கப்பட்ட புனித ஸ்தலம் எட்ச்வெயார் அம்மன் திருக்கோயில்-திருப்பணி

இலண்டன் எட்ச்வெயரில் (25 – 27 High St, Edgware, Middlesex, HA8 7EE) 21ம் நூற்றாண்டின் முதல் நாள் முதல் விநாடி காயத்ரீ அம்மன் ஆலய ஸ்தலத்தில் விசேஷ அபிஷேக ஆராதனையுடன் சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டது. பெரிய அளவில் திட்டமிடப்பட்டிருப்பதால் அதற்கான வேலைகள் துவங்கப்பட்டு இருக்கின்றது. இங்கு தினமும் காலை 7.30மணி முதல் இரவு 8.30மணி வரை பக்தர்கள் வழிபடுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களிற்கு நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும் ( 0208 905 7775).

ஆலயத்தின் பூரணமான திட்டம் பாரிய அளவில் திட்டமிடப்பட்டு இருப்பதால், பகுதி பகுதியாகவே கட்டிட வேலைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. மேலும் வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதிகளும் இருக்கின்றது (விரைவில் அதிபடியான வாகனங்கள் நிறுத்துவதற்கான ஏர்ப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது). தைப்பொங்கலை முன்னிட்டு விசேட அபிஷேக-ஆராதனைகளும் இடம் பெற உள்ளது. அன்று பக்தர்களும் கலந்துகொள்ளலாம். மேலும் தைப்பூசத் திருநாள் அன்று தெய்வீக இன்னிசை நிகழச்சியினை நடத்த விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது. ஆன்மீக ஈடெற்றத்துடன் எமது தெய்வீக கலையையும் கலாச்சாரத்தையும் வளர்க்க எமது மக்கள் அதற்கு முழுமனதுடன் துணை புரிய வேண்டும் என நிர்வாகத்தினர் இது பற்றி கருத்து கூறுகையில் தெரிவித்தனர்.

## உதயனின் கோணத்தில்

இது முதலாவது இதழாக அமைவதால் இப் பகுதியை அறிமுக பகுதி ஆக்குகிறோம். சில ஆண்டுகளிற்கு முன் வெளிவந்த இவ் இதழ் தவிர்க்க முடியாத சில காரணங்களினால் தடைப்பட்டது. ஆயினும் இதன் சகோதரப் பத்திரிகையான **Asian Chronicle** தொடர்ந்தும் வெளிவந்து கொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் முன்னர் ஏற்பட்ட எந்த தடங்கலும் இன்றி உதயன் தொடர்ந்தும் வெளிவரும் என்பதை வாசகர்கள் ஆகிய உங்களிற்கு தெரிவித்து கொள்கிறோம். இவ் இதழில் சில செய்திகள் காலம் கடந்தவையாக இருப்பதை நீங்கள் கவனித்து இருப்பீர்கள். இத் தவறுகள் வரும் இதழ்களில் நிச்சயம் களையப்படும். எமது தவறுகளிற்கு வருந்துகிறோம். நிற்க.

தமிழ் இனமானது இப்போது தான் தன் முன்னோக்கிய தேடலை ஆரம்பித்து உள்ளது. இத் தேடலானது இலக்கியங்களிற்குள் மட்டும் அடங்கிவிடவில்லை; அரசியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொருளாதாரம், அலங்காரம், சமூகவியல், ஊடகவியல் எல்லாவற்றிலும் தன் பார்வையை பதித்து உள்ளது. இத் துறைகளின் துரித வளர்ச்சிக்கு தமிழ் ஈடுகொடுக்குமா ? என்பது பல தமிழ் ஆர்வலர்களுடைய கேள்வி. இதற்கு ஒரே விடை தான் உண்டு; தமிழர்களிற்கு அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசத்திற்கு சுயநிர்ணய உரிமை பெறப்பட வேண்டும். அப்போது தான் தமிழர்கள் சுய கௌரவத்துடன் வாழமுடியும், தமிழர்கள் வாழ்ந்தால் தான்

(தொடர்ச்சி 1ம் பக்கம்)

Bismillah Butchers
HALAL MEAT CASH & CARRY
WHOLESALE & RETAIL
உங்கள் தேவைக்கேற்ப சின்ன சின்ன துண்டுகளாக வெட்டித் தரப் படும்
141 Ealing Road, Wembley, Middx. HA0 4BP
Tel: 0181-903 4922

**மலர்ந்து உள்ள புதிய நூற்றாண்டு எல்லோர் வாழ்விலும் மகிழ்ச்சியையும்; உலகில் சமாதானத்தையும் சமத்துவத்தையும் சகவாழ்வையும் கொண்டு வர உதயனின் வாழ்த்துக்கள்.**

21ம் நூற்றாண்டின் முதலாவது இதழை உங்கள் முன் கொண்டு வருவதில் உதயன் ஆசிரியர் குழு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது. நீண்ட இடைவெளிக்கு பின் இப் பத்திரிகையை கொண்டுவருவதில் ஒத்துழைப்பை வழங்கிய அனைவரிற்கும் விளம்பரதாரர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றி.

இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

RENSU
MILLENIUM MEGA DEAL
DURACELL Batteries from 99p
CAR ACCESSORIES, FILM AND BATTERIES, VIDEOS, DUREX AND MATES, SOFT TOYS, SOFT DRINKS AND SNACKS.
TEL: 01753 554970
FAX: 01753 554898

Palm Beach
Under New Management
Fully Licensed
Finest Sri Lankan & South Indian Cuisine
Vegetarian and Non-vegetarian
Specialised in catering for wedding and parties
Open 12.00 noon to 3.00 pm and 6.00 pm to midnight
17 Ealing Road Wembley Middlx, HA0 4AA
Tel: 0181 900 8664
0956 439 765

உங்கள் திருப்தி - எங்கள் சேவை
LinkAIR Travels Limited
நாம் ஏற்பாடு செய்யும் சில சுற்றுலாக்கள்:
சென்னை நகர வலம்
மகாபலிபுரம் சுற்றுலா
பாண்டிச்சேரி 1 நாள் சுற்றுலா
8 நாள் இந்தியாவின் கிழக்கு முதல் மேற்கு வரை சுற்றுலா
8 நாள் தமிழ்நாடு சுற்றுலா
திருப்பதி - பகல் இரவு பயணம்
முருகபெருமான் ஆறுபடைவீடு சுற்றுலா
3 நாள் நவக்கிகை ஆலயங்கள் சுற்றுலா
குறைந்த கட்டணம் - சிறந்த விதமான சேவை - உலகின் எப்பகுதிக்கும் விரைவான சேவை. பிரிட்டன் உட்பட ஐரோப்பா முழுவதும். தமிழ்நாடு அரசாங்கத்தின் சுற்றுலா பயணத்துறையை அபிவிருத்தி நிறுவனத்தினால் ( T.T.D.S ) அங்கீகரிக்கப்பட்ட ஒரே பிரதிநிதி எங்கள் நிறுவணம்தான்.
Specialist for: SRI LANKA - SOUTH INDIA SINGAPORE & CANADA
இந்திய விசா நாமே பெற்றுத்தருவோம்
திங்கள் - சனி 10.00 - 20.00 வரை திறந்திருக்கும்
Call: SIVA PREM / MOLY RESHMA
361 London Road, Croydon, Surrey CR0 3PB
Tel: 0181-665 0206 Fax: 0181-689 2576
e-mail: sales@linkair.co.uk Emergency Tel. No.: 0956 676 360
ATOL IATA SriLankan

# Palm Palace

PALM PALACE

## Taste Of Paradise

We Specialize in Srilankan & Southindian Dishes

and we cater for all the occasion

We are closed on Tuesdays

80 South Road Southall
Middlesex, UB1 1RD

Tel: 0181 574 9209

Email: PalmPalace@hotmail.com

# MORJARIA'S

## CASH & CARRY- MAIL ORDER

| OPEN | | |
|---|---|---|
| | Monday - Friday | 10.00am-6.00pm |
| | Thursday | 10.00am-8.00pm |
| | Sunday | 9.00am-3.00pm |

East End Prices in a North West London Location

EXPORT ENQUIRIES WELCOME

Shopkeepers, Market Traders, Party Planers, Homesellers and Mail Order enquiries all Welcome

STARTER PACKS AVAILABLE

Stationery, Household, Hardware, Toys and Fancy Goods

SWITCH

PHONE FOR FREE PRICE LIST

DELTA

**VALENTINE GIFTS AND SOFT TOYS NOW AVAILABLE**

**Household**

Kitchen gadgets, Cleaning cloths, Sponges, plastic ware, Plasters, Toiletries and Toiletry gift sets

**Toys**

Pocket money toys, Soft toys, Ornaments, Vasses, Giftware, Kids books, Party plates, Cups,Party bag fillers and Toiletry gift sets

**Tools**

Hammers, Screwdrivers, Chisels, Pliers, Hex key, Sand papers, Saws, Fuses, Padlocks, Measure tapes, Paint brushes

**Stationery**

Pads, Envelopes, Pens, Pencils,Crayons, Files, Rulers, Writing papers, Pencil cases, Musical cards, Shaperners, Super glue

TRADE ONLY

United Patients Building,
Northcircular Road,
Park Royal,
London NW10 7UD
Tel: 0208-357 1554
Fax: 0208-3571564

acl Drayton

ARISTON
THE INSTALLERS' BRAND

Honeywell

# AQUA LITE

TRADING LTD.

PLUMBERS MERCHANT

&

ELECTRICAL WHOLESALERS

*PLUMBING ACCESSORIES
*RADIATORS, SINKS, & TAPS
*BOILERS & CYLINDERS
*CABLES, FANS, LIGHTING
*ALL RE-WIRING ACCESSORIES

**BATHROOM SHOWROOM**

OPEN MON-FRI 7.30AM-6.30PM
SAT 8AM-4PM
SUNDAY 9.30AM-12.30PM

உங்கள் வீட்டுக்கு தேவையான
சகலவிதமான **Bathroom
Suite, Boilers, Heaters,
Pumps, Rewiring Materials,**
மொத்தமாகயும் சில்லரையாகவும்
மலிந்த விலையில் ஒரே
இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

020 8931 2444
Fax: 020 8931 2555

Internet address
http://freespace.virgin.net/aqualite.trading
Email: aqualite.trading@virgin.org

16 BERESFORD AVE, WEMBLEY

Hamilton Litestat group

Chaffoteaux et Maury

POTTERTON

KESTON Boilers

HEATRAE SADIA Megaflo

Ideal

Vaillant

MK

BG

# Ford தொழிற்சங்க கோரிக்கைக்கு முகாமைத்துவம் பணிந்தது இனசமத்துவம் கோரி 1,300 பேர் வேலை நிறுத்தம்

(கிழக்கு இலண்டன், 12, நவ) - தொழிற்சங்க செயளாளர் Bill Morisற்கும் நிறுவனத்தின் அமெரிக்க தலைவர்களிற்கும் இடையே இடம்பெற்ற பேச்சு வார்த்தை; தொழிற்சங்கத்திற்கு வெறிறி அளித்து உள்ளது. தொழிற்சங்கத்தின் வேண்டுகோள்களிற்கு Ford முகாமைத்துவம் பணிந்தது. நவம்பர் முதல் வாரத்தில் கிழக்கு இலண்டன் கிளையில் பணியாற்றுவோரிற்கு 11% சம்பள உயர்வும், வேலைநேரம் 90 நிமிடத்தாலும் குறைக்கப்பட்டது. இவற்றுடன் பிரசவ விடுமுறையில் சலுகைகளும் வழங்கப்பட்டு உள்ளது.

மேலும் ஒக்ரோபர் 5 ல் Ford Dagenham பிரிவின் ஒரு பகுதி தொழிராளர்கள் 1,300 பேர், நிறுவனத்தில் நிலவும் இன சமத்துவம் இன்மையை கண்டித்து; திடீரென வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இவ் வேலை நிறுத்தத்தில் எல்லா இனத்தவரும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இதனால் அன்றைய பகல் உற்பத்தி வேலைகள் தடைப்பட்டது. பகல் வேலை நிறுத்தத்தால் இரவு வேலைகளும் தடைப்பட்டது. இதனால் நிறுவனத்திற்கு £25 மில்லியன் வரை உற்பத்தி நஸ்டம் ஏற்பட்டிருப்பதாக தெரிய வந்துள்ளது.

கடந்த வாரம் வெள்ளை மேற்பார்வையாளர் அவரிற்கு கீழ் என்ஜின் பகுதியில் கடமையிலிருந்த ஆசிய நாட்டவரை தள்ளியதை தொடர்ந்து அப் பகுதியில் பதட்டம் ஏற்பட்டது. ஆனால் அது சிறிது சிறிதாக ஏனைய பகுதிகளிற்கும் கசிந்தது. இச் சம்பவத்தை தொடர்ந்தே வேலை நிறுத்தத்தில் தொழிலாளர்கள் குதித்ததனர் என்று எமக்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

நிறுவனத்தின் கிழக்கு இலண்டன் பிரிவில் உள்ள தொழிலாளர்களில், 44% ஆன 7,129 தொழிலாளர்கள், ஆபிரிக்க-கரிபிய இனத்தவர்களும் ஆசிய நாட்டவர்களும் ஆவர். இவ் வேலை நிறுத்தம் அங்கு நடந்த முதற் சம்பவம் அல்ல. ஒரு தடவை ஏற்பட்ட கலவரத்தில் உற்பத்திக்கு தயாரான கார்கள் நொருக்கப்பட்டு நிறுவனத்திற்கு £5 மில்லியன் சேதம் ஏற்பட்டது. மேலும் 1997 ல் 7 சிறுபான்மையினரை வேலை நீக்கம் செய்ததற்கு எதிரான வழக்கில், நிறுவனம் அவர்களிற்கு £70,000 நஸ்டஈடு செலுத்தியது. அத்துடன் 1996 ல் காரிற்கு வர்ணம் விசிறுவதான(air-brushing) விளம்பரம் ஒன்றில் கறுப்பு முகங்களை மட்டுமே காட்டி; அச் சமூகத்தை தரம் தாழ்த்தியதற்காக, இந் நிறுவனம் மன்னிப்பு கோரியதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் செப்ரம்பர் மாதம் 23ம் திகதி ஆசிய நாட்டவர் தொழில்வழக்கு சபையில், Ford நிறுவனத்தில் தனது மேல் அதிகாரிகளால் இனத் தாக்குதலிற்கு

( Contd. on Page 4 )

K.T.
COLOMBO TASTE

Your Satisfaction is our pleasure.

100 String Hoppers With
Sothi And Sambol £15 Only

Fresh Veechu Roti available
in large quantities
every day.

Wedding, Birthday Party
Orders Delivered FREE

5 BILTON ROAD, PERIVALE
GREENFORD, MIDDLESEX UB6 7AY

TEL: 0181 991 6834

SALE
ATS
SALE

SPECIAL MILLENIUM OFFER
UNBEATABLE PRICES

QUALITY LAMINATED FLOORING FROM £ 7.99 SQ.MTR

CARPETS FROM £ 1.99 SQ.MTR
SINGLE BEDS FROM £ 59
DOUBLE BEDS FROM £ 85
SINGLE PINE BEDSTEADS FROM £ 65
DOUBLE PINE BEDSTEADS FROM £ 99
3 PIECE SUITES FROM £ 270

FREE FITTING
FREE ESTIMATES
FREE DELIVERY

Bring this AD
5% OFF

PLEASE PHONE FOR OTHER QUOTATIONS
0181 900 1643
Fax: 0181 9001643

SALE
SALE

318 HARROW ROAD, WEMBLEY, MIDDX. HA9 6LL
We can match anybodies written quotation

# விரைவில் ஐ.நா சபை இலங்கைக்கு விஜயம்

(இலங்கை, 6 ஒக்) - இலங்கையில் இடம் பெறும் கைதுகள், காணாமல் போவோர், மற்றும் அங்கு இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விடயங்களை ஆராய இவர்கள் இலங்கை செல்கிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் வேலைத் திட்டப்பிரிவே இம் மாதம் இலங்கை செல்ல திட்டமிட்டுள்ளனர். இவர்களைத் தொடர்ந்து ஐ.நா வின் சித்திரவதைக்கு எதிரான அமைப்பு 2000ம் ஆண்டின் ஆரம்ப பகுதியில் செல்லவுள்ளது.

1988 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து 16,750 பேர் வரை, இலங்கையில் காணாமல் போயுள்ளதற்கான ஆதாரங்களை, காணாமல் போனோர் பற்றிய விசாரணைகளை மேற்கொண்ட அரச விசாரணைக் குழு பதிவு செய்துள்ளது. 1997 இல் காணாமல் போனோர் பட்டியலில் இலங்கையே முதலிடம் வகித்தது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபை போன்ற மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகள் தான் இங்கு தஞ்சம் கோருவோரின் வழக்குகளிற்கு ஆதாரங்களாக சமர்ப்பிக்கப்டுவது குறிப்பிடத்தக்கது. இவ் அறிக்கைகளை வைத்தே உள்துறை அமைச்சு தஞ்சம் கோருவோர் விடயத்தில் தளர்வையோ அல்லது இறுக்கத்தையோ மேற்கொள்ளும்.

# 65,000 காஷ்மீரியர்கள் கொலை !!!

(இலண்டன், 06 ஒக்) - அமெரிக்காவில் இயங்கும் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பும் சர்வதேச மன்னிப்புச் சபையும் காஷ்மீரில் இந்திய இராணுவத்தின் மனித உரிமை மீறல்களை கண்டித்துள்ளன. அவற்றின் அறிக்கையில் இதுவரை 65,000 காஷ்மீரியர்கள் கொல்லப்பட்டும் 93,000 பேர் காணாமல் போயும் 15,000 காஷ்மீரியப் பெண்கள் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டும் உள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காஷ்மீர் தொடர்பாக இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையில் எப்போதுமே முறுகல் நிலை இருந்து கொண்டே இருக்கிறது. இப்போது அது மேலும் முறுகேறி யுத்தமளவிற்கு கொண்டு சென்றது யாவரும் அறிந்ததே. இந்த சூழல் காஷ்மீரிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதை மூடிமறைத்து விட்டது. கடந்த பல பத்து ஆண்டுகளாக நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டும் காணாமல் போயும் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டும் உள்ளனர் என்ற வேதனையான உண்மைகள் இப்படி அடிபட்டுப் போவது ஒடுக்கப்படும் சமூகங்களின் வரலாறு ஆகிவிட்டது.

# சித்திரவதையில் முடியும் கைதுகள்

## இரும்புத் தடியை மலவாயினுள் செலுத்திய பொலிஸ்

(கொழும்பு, 10 செப்) - தலைநகர் கொழும்பில் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக கைதுகள் இடம் பெறுவது ஒன்றும் புதிய விடயமல்ல. இது கொழும்பில் உள்ள, குறிப்பாக ஈழத்தமிழரின் அன்றாட வாழ்க்கையாகிவிட்டது. இதனை எப்படியோ தாங்கி வந்த தமிழர்கள் இப்போது வதைக்கப்படுகிறார்கள். இது பற்றி அறிய வருவது, ஸ்ரீராம், விமல்ராஜ், ஸ்ரீகாந்தன் ஆகியோர் கொழும்பில் வெவ்வேறு இடங்களில் கைது செய்யப்பட்டு, பொலிஸ் காவலில் வைத்து, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். கலாநிதி நீலனின் கொலையை தொடர்ந்து, மிறிகன பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் ஸ்ரீராம். இவருடன் இன்னும் 8 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். இருவரை கடுமையாக சித்திரவதைக்கு உட்படுத்தினர். அவர்களின் முதுகுகில் கடுமையாக தாக்கப்பட்டதற்கான அடையாளங்கள் தென்படுகின்றது. மேலும் அவர்களுடைய மணிக்கட்டில் அவர்களை கட்டி தொங்க விட்டதற்கான அடையாளம் தெளிவாக உள்ளது.

மன்னார் மாவட்டத்தை சேர்ந்த அந்தோனிப்பிள்ளை விமல்ராஜ், நியு ஏசியா லொட்ஜில் வைத்து விசாரணைக்காக, கொட்டகெனா பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார். பின் பொலிஸ் நிலையத்தில் நடந்த விசாரணையின் போது, தாறுமாறாக உடல் பூராவும் தாக்கப்பட்டார். மேலும் கொடுமையாக விரல் நகங்களுக்கிடையே குண்டுசிகள் ஏற்றினர். இன்னும் கொடுமையாக மலவாசலினூடு இரும்புத் தடியை நுழைத்து கொடுமைப்படுத்தினர்.

யாழ் மாவட்டம் கொடிகாமத்தை சேர்ந்த சிவஞானசுந்தரம் ஸ்ரீகாந்தன் வெள்ளவத்தையில் வைத்து கைது செய்யப்பட்டு; Crime Detection Bureau (CDB) ல் தடுத்து வைக்கப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டு ஒரு மாதத்தின் பின் அவரது குடும்பத்தவர்கள் 5 நிமிடங்களே பார்க்க அனுமதிக்கப்பட்டனர். அப்போது ஸ்ரீகாந்தனுடைய முகம் வீங்கியிருந்ததாகவும் நடப்பதற்கு கஷ்டப்பட்டதாகவும் குடும்பத்தினர் தெரிவித்தனர். இது பற்றி கிடைத்த இன்னுமோர் தகவலில் ஸ்ரீகாந் கயிற்றில் கட்டி தொங்கவிடப்பட்டு மிருகத்தனமாக தாக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

# பொதுமக்கள் மீது திரும்பும் குறி

(ஈழம், 20 செப்) - விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையே நடைபெறும் வெற்றி, தோல்வி அற்ற உள்நாட்டு யுத்தத்தில், கடந்தமாதம் மேலும் 100 உயிர்கள் இழக்கப்பட்டுள்ளது. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருதரப்புமே யுத்தம் மக்களுக்கு எதிரானதல்ல என்று கூறிக்கொண்டே; மக்கள் மீது யுத்தத்தை தொடுத்திருப்பதாக, மனித உரிமை அமைப்புகள் விசனம் கொண்டுள்ளன.

மேற்படி தாக்குதல்கள் பற்றி தெரியவருவதாவது, இலங்கை விமானப் படையினர் புதுக்குடியிருப்பில் உள்ள விடுதலைப் புலிகளின் இலக்கு ஒன்றை தாக்குவதாக கூறிக்கொண்டு பொதுமக்கள் மீது தாக்கியதாகவும் 21 பொதுமக்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது. தாம் வேண்டுமென்று பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை; என்று குறிப்பிட்ட இராணுவப் பேச்சாளர் மேலும் குறிப்பிடுகையில், இரண்டு இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அதில் ஒன்று புதுக்குடியிருப்பிற்கு 5km கிழக்கில் உள்ள புலிகளின் நந்திக்கடல் முகாம் என்றும் குறிப்பிட்டார்.

இத் தாக்குதல் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்ட அறிக்கையில், குறிப்பிட்ட தரை இலக்கு மீது வான் தாக்குதல் நடத்தும் போது; இலக்கு பற்றிய புலானாய்வுப் பிரிவின் தகவல்களை உறுதிசெய்வது, பொதுமக்கள் அத்தாக்குதலால் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதை உறுதிசெய்வது போன்ற நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியிருக்கின்றது. மேலும் இலக்கின் தூரம் அதிகரிக்கும் போது இலக்கு தவறும் சந்தர்ப்பம் அதிகரிக்கும். மற்றும் தாக்குதல் நேரம், தாக்குதல் நடாத்தப்படும் முறை போன்றன எல்லாம் தாக்குதலிற்கு முன் கவனிக்கப்பட்டதா? என்ற கேள்வியையும் மன்னிப்புச்பை எழுப்பியுள்ளது.

இவ் வான் தாக்குதல் நடத்தப்பட்டு சரியாக 3 நாட்களின் பின், 18 செப்ரம்பரில் தமிழீழ எல்லைப்புற மாவட்டமான அம்பாறையில் உள்ள 3 கிராமங்களிற்குள் புகுந்த பெண் புலிகள் தலைமையிலான குழு; பெண்கள், குழந்தைகள் உட்பட 50ற்கு மேற்பட்ட சிங்கள மக்களை வெட்டிக் கொன்றதாக, சர்வதேச செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மேலும் இது ஓர் பழிவாங்கும் தாக்குதல் என்று விவரித்துள்ளன.

சந்திரிகா குமாரதுங்கா பதவிக்கு வந்தபின், இலங்கை அரசை பற்றியிருந்த கறையை துடைப்பதில் மிகுந்த வெற்றி பெற்றுள்ளார். இன்று அவர் மிகுந்த சர்வதேச ஆதரவுடைய ஜனதிபதியாக உள்ளார். மறுபக்கம் இந்தியா, அமெரிக்கா ஆகியன புலிகளை பயங்கரவாத அமைப்பாக ஏற்கனவே பிரகடனப்படுத்தி உள்ளன. முன்னர் அவர்களுக்கு இருந்த சர்வதேச அங்கிகாரம் இப்போது மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை சர்வதேச செய்தி நிறுவனங்களின் செய்திகள் வெளிப்படுத்துகின்றன. இப்போதைய சிங்கள மக்கள் மீதான தாக்குதல் புலிகளின் சர்வதேச தலைவர்களிற்கு பெருத்த நெருக்கடியை கொடுக்கும்; என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.




# Ford தொழிற்சங்க....

( Contd. from Page 3 )

உட்படுத்தப்பட்டதற்கு எதிராக, தாக்கல் செய்த வழக்கில் வெற்றி பெற்றுள்ளார். Sukhjit Parma கடந்த 4 ஆண்டுகள் உற்பத்தி இயக்குனராக இருந்தவர்; தொடர்ச்சியான இனபாகுபாட்டிற்கு உட்பட்டு இறுதியில் நீதிமன்றில் நியாயம் பெற்றார். கடந்த 4 ஆண்டுளிலும் பல இன்னல்களை மேலுள்ள அதிகாரிகள் அளித்ததாகவும் பல அவமானங்களை தந்தனர் என்றும் பாதிக்கப்பட்டவார் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் தனது சம்பள உறையில் பாக்கி என்று எழுதுவதாகவும் தனது இஸ்லாம் மத்தைப் பற்றி தரக்குறைவாக சுவர்களில் எழுதியதாகவும் முறையீடு செய்தால் கொலை செய்வோம் என்று பயமுறுத்தியதாகவும் குறிப்பிட்டார். பின் தொழிற்சங்கத்தின் உதவியுடன் வழக்கு தாக்கல் செய்து கடந்த மாத இறுதிப் பகுதியில் வழக்கில் வெற்றியும் பெற்றார். இவருக்கு நஷ்டஈடு வழங்கவும் தமது நிறுவனத்தின் இனசமத்துவம் பற்றி மீளாய்வு செய்யவும் Ford நிறுவனம் முன் வந்துள்ளது.

பல்தேச நிறுவனமான Ford ற்கு ஏதிராக வெற்றி பெற்ற முதல் இனசமத்துவம் பற்றிய வழக்கு இதுவாகும். Ford நிறுவனம் மேற்படி சம்பவத்தில் சம்பந்தப்பட்ட ஒருவரை பதவி நீக்கியும் இன்னொருவரை தற்காலிகமாக வேலை நிறுத்தியும் இருந்தது. ஆனால் அவ் இருவரும் மேன்முறையீடு செய்ததை தொடர்ந்து; மேன்முறையீட்டின் அடிப்படையில் அவர்களை மீண்டும் பதவிகளில் அமர்த்தி உள்ளார்கள். இதுவும் வேலை நிறுத்தத்திற்கான பின்னணிகளில் ஒன்றாகும்.

தொழிற்சங்கம் பல தடவைகள் இனசமத்துவம் பற்றிய விடயங்களை சுட்டிக் காட்டிய போதும், முகாமைத்துவம் அதில் கவனம் எடுக்கவில்லை என்று தொழிற்சங்க செயளாளர் Bill Moris தெரிவித்து இருக்கிறார். அவர் மேலும் குறிப்பிடுகையில் நிறுவனத்தின் அமெரிக்காவில் உள்ள தலைவர் Jac Nasser உடன் சந்திப்பு ஒன்றிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் கூறினார். இச் சந்திப்பு ஒக்ரோபர் இறுதிப் பகுதியில் இடம்பெற்றது.

# தமிழீழத்தில் பணியாற்றிய மருத்துவ அமைப்பிற்கு-சமாதானத்திற்கான நோபல் பரிசு

(ஒஸ்லோ, 17 நவ) - Medecins Sans Frontieres, 'எல்லைகள் அற்ற மருத்துவர்கள்' அமைப்பிற்கு, 1999ம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு, ஒக்ரோபர் மாதம் 15ம் திகதி வழங்கப்பட்டு உள்ளது. உலகின் சுதந்திர மருத்துவ அமைப்பான, எல்லைகள் அற்ற மருத்துவர்கள் அமைப்பிற்கு இப் பரிசு வழங்கப்பட்டதில் உலகத் தலைவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியை வெளியிட்டு உள்ளனர்.

( Contd. on Page 12 )

1986 முதல் MSF மருத்துவர்கள் தமிழீழ பகுதிகளில் சேவையில் ஈடுபட்டு உள்ளனர்.

## போதை தலைக்கேறி காதைக் கடித்து துண்டாடினார்

(வெம்பிளி, 01 ஒக்) - இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்திற்குள் சமரசம் செய்ய முயன்ற போது; சமரசம் செய்ய முயன்றவரை கன்னத்தில் ஆழக்கடித்து, அவருடைய காதையும் கடித்துத் துண்டாக்கிவிட்டார் அவரது நண்பர்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, மாலை 8.35 ற்கு தனது மாடித் தொகுதியில் வேலை நண்பர்களுடனும் வீட்டு நண்பர்களுடனும் மது அருந்தி மகிழ்ச்சியாக இருந்தபோது அதற்குள் இருவருக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனை சமாதானப்படுத்த பாதிக்கப்பட்டவர் முயன்றிருக்கிறார். ஆனால் வாதத்தில் ஈடுபட்டிருந்த ஒருவர் சமாதானம் செய்ய முயன்ற 23 வயதுடைய இளைஞரை இழுத்து வெளியே வீழ்த்தியிருக்கிறார். அத்துடன் விடாமல் அவர் மீது பாய்ந்து அவரது கன்னத்தில் 8mm ஆழத்திற்கு கடித்திருக்கிறார். தாக்குதலை தொடர்ந்த 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் பாதிக்கப்பட்டவரது காதையும் விட்டுவைக்கவில்லை. வலது காதின் கீழ்ப் பகுதியை கடித்து துண்டாடி எடுத்து விட்டார். இவ்வளவு அட்டகாசத்தையும் புரிந்துவிட்டு அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டார்.

சம்பவத்தை தொடர்ந்து அவ்விடத்திற்கு விரைந்த மருத்துவ வண்டியில் பாதிக்கப்பட்டவர் அருகில் உள்ள Northwick Park Hospital ற்கு அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அதன் பின்னர் Mount Vernon Hospital ற்கு சத்திர சிகிச்சைக்காக மாற்றப்பட்டார். சம்பவம் நடந்த இடத்தை சோதனையிட்ட பொலிஸார், துண்டிக்கப்பட்ட காதின் மறுபகுதியை கண்டெடுத்து மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் என்பார்கள். இனிமேல் கலகம் பிறந்தால் உங்கள் காதுகள் கவனம்.

## இந்தியா, பாகிஸ்தான் நாடுகளிற்கான BT Celnet தொடர்புகள் இடைநிறுத்தம்

(இலண்டன், 01 ஒக்) - செப்ரம்பர் இறுதியில் சில நாட்களாக BT Celnet தனது இந்தியா, பாகிஸ்தான் நாடுகளிற்கான சேவையை தற்காலிகமாக துண்டித்தது. இதுபற்றி இத் தொடர்பு நிறுவனப் பேச்சாளர் பத்திரிகைகளிற்கு விடுத்த செய்திக் குறிப்பில், இவ்விரு நாடுகளிற்கும் செய்யப்பட்ட அழைப்புகள் அசாதாரணமாக அதிகரித்து இருந்தது; ஆனால் அழைப்புகளிற்கான கட்டணம் செலுத்தப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

தமது நிறுவனம் வழமையான சோதனைகளை தொடர்ந்தும் செய்து வந்தது; ஆனால் அச்சோதனைகளால் இந்த மோசடிகளை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், இம் மோசடி மிகவும் திட்டமிட்டு பணம் உருவாக்கும் குழுவினரால் அல்லது இந் நிறுவனத்தின் தொழில்நுட்பபிரிவில், தொழில் புரியும் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார். இம் மோசடியால் பல்லாயிரம் பவுண்கள் நிறுவனத்திற்கு நஸ்டம் ஏற்பட்டிருக்கும் என்று நம்பப்படுகிறது. ஏற்பட்ட நஷ்டம் பற்றி இன்னும் நிறுவனம் மதிப்பிடவில்லை என்று அப்போது தெரிவிக்கப்பட்டது.

## தாஜ்மகால்-அழியும் காதல் ஓவியம்

(நியுடெல்லி, 03 ஒக்) - உலகப் புகழ் பெற்ற தாஜ்மகால், இப்போது பொலிவிழந்து வருகிறது. அப் பகுதியில் பெருகிவரும் தொழிற்சாலைக் கழிவுகளினால், ஏற்படும் சூழல்மாசடைவே இதற்கு காரணம். இக் கழிவுகளால் ஏற்படும் அமில மழை, சேதாரத்தை மேலும் அதிகரிக்கும் என நம்பப்படுகிறது. வெள்ளை பளிங்குக் கற்களால் கட்டப்பட்டது தாஜ்மகால்; இப்போது வெளிறிய மஞ்சளாக மாறிவருகிறது. மேலும் பளிங்குகளில் வெடிப்பும் சிதைவும் ஏற்பட்டுள்ளது. இச் சிதைவுகளை India's Archeological Survey (ASI) புதிய கற்கள் கொண்டு சீர்செய்கிறது. அவற்றை சிதையவிடாது தடுப்பதற்கு பதில், புதிய கற்களை வைத்து ஈடுசெய்தால் அதன் சிறப்பு போய்விடும் என வருந்துகிறார்கள் ஆர்வலர்கள்.

தாஜ்மகால் அமைந்துள்ள அக்ரா பகுதியில் சூழல் மாசடைய அங்குள்ள 1000 ற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் தான் காரணம். கோக்கில் இருந்து இயற்கை வாயு உட்பட பலவற்றை இவ் ஆலைகள் உற்பத்தி செய்கின்றன. இப்போது தாஜ்மகாலை சுற்றியுள்ள 50 தொழிற்சாலைகளை மூடுவதற்கு மேல்நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது. மேலும் 500 யார் சுற்றளவிற்கு மரங்கள் நாட்ட சிபார்சு செய்துள்ளது. அத்துடன் அங்கு சட்ட விரோதமாக குடியேறியுள்ளோரையும் வெளியேற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவின் அரசியல் பொருளாதாரச் சூழ்நிலை, மக்களை இப்படியான கலை பொக்கிஸங்கள் பற்றி சிந்திக்க இடம்கொடுக்கவில்லை. மேலும் அதிகாரிகள் எப்படி இவற்றை நிர்வகிக்கிறார்கள் என்பதும் கேள்விக்குரியது.

1632ல் சாஜகான் தான் காதலித்த மனைவிக்காக கட்டிய இம் மாளிகை; ஓர் மேற்குலக நாட்டில் இருந்திருந்தால், அதுவே ஓர் பணம் கொட்டும் மாளிகையாக மாறியிருக்கும். ஆனால் இந்தியாவிலே அது அழிந்து கொண்டிருக்கிறது. சுற்றுலாத்துறையை ஈர்க்கும், இப்படியான பல அம்சங்கள் இருந்தும்; அவற்றை ஒருங்கிணைத்து நிர்வகிக்கவும் கவர்ச்சிகரமாக்கி உலகிற்கு காட்டி, உற்பத்தியை பெருக்கவும்; ஆற்றல் குன்றியவர்களாக உள்ளனர் இந்திய அதிகாரிகள்.

SATHY ESTATES LIMITED

Sales and Lettings

220 High Street
Harlesden
London NW10 4SY

220 High Street
Harlesden
London NW10 4SY

RESIDENTIAL SALES AND LETTINGS

LANDLORDS: YOUR RENT IS GUARANTEED, FREE MANAGEMENT SERVICES GUARANTEED RENT FOR 52 WEEKS A YEAR

SALES: PROPERTIES REQUIRED FOR THE AREAS LISTED BELOW OUR COMMISSION RATES ARE COMPETITIVE WE GIVE A SUBSTANTIAL REDUCTION FOR SOLE AGENCY

AREAS: LONDON BROUGHT OF BRENT, HARROW, EALING, HAMMERSMITH & FULHAM &WESTMINSTER

TENANTS: ACCOMMODATION ARRANGED TO SUIT YOUR COMFORT

PLEASURABLE AND PEACEFUL LIFE IS EVERYBODY'S DREAM THROUGHOUT THEIR LIFE SPAN.

WE DO SELL PROPERTY IN THE COLOMBO AREA IN SRI LANKA

- FOR MORE DETAILS CONTACT: THIRU

## கனடாவில் நிகழ்ந்த கோரம் தமிழ் மாணவியின் எலும்புக் கூடு மீட்பு

(கனடா, 13 ஒக்) - கடந்த யூன் மாத இறுதியில் செல்வி ஆனந்தவேள் சாமினி வீட்டிற்கு திரும்பவில்லை என்று பொலிஸில் புகார் செய்யப்பட்டது. ஆயினும் அவர் பற்றிய எந்த தகவலையும் பொலிஸாரால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒக்ரோபர் 12ம் திகதி பூங்கா ஒன்றில் இருந்து ஓர் எலும்புக் கூடு கண்டு எடுக்கப்பட்டது. இவ் எலும்புக் கூடு, குற்றவியல் உடற்கூற்றாளர்களால் (Forensic Pathologists) பரிசோதனை செய்யப்பட்டு; காணமற் சென்ற செல்வி சாமினியின் உடற் கூறுகள் தான் என்று உறுதி செய்யப்பட்டு உள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, 15 வயதே நிரம்பிய செல்வி சாமினி ஓர் பள்ளி மாணவி. இவர் காணமல் போன அன்று, புதிய பகுதி நேர வேலைக்கு சென்றதாகவும்; ஆனால் வீடு திரும்பவில்லை என்றும் தெரிகிறது. கனடாவில் வெளியாகும் சன் பத்திரிகையில் முழு முதற் பக்கத்தையும் நிரப்பிய இக்கோரச் சம்பவம், குற்றவியல் நிபுணர்களிற்கு பெரும் சவாலாக அமைந்து உள்ளது.

(Contd. on Page 12)

Jeya & Co. Solicitors

* Residential & Commercial Coveyancing

at Very Competitive cost

* Immigration * Police Station Advice

EMERGENCY: 07818 022 841

322 HIGH STREET NORTH, MANOR PARK, LONDON E12 6SA
TEL: 0181 552 1999 FAX: 0181 552 9933

# Benefit Cut வரும்

# நூற்றாண்டில் அரச உதவிகள் வெட்டு

(இலண்டன், 17 நவ) - நவம்பர் 17ம் திகதி இடம் பெற்ற இராணி உரையில் உதவிநலத் திட்டம் மாற்றி அமைக்கப்படுவது பற்றியும் அறிவிக்கப்பட்டு உள்ளது. இராணி உரையில் இடம்பெற்ற 28 சட்ட ஏற்பாட்டில், உதவிநல சீர்திருத்தம் முக்கிய இடம் பெற்றது. செப்ரம்பர் மாத இறுதியில் ICM வெளியிட்ட கருத்துக் கணிப்பில், அரசு வழங்கும் சகல பொருளாதார உதவிகளையும் மேலும் மேலும் கடினமாக்க 84% மக்கள் ஆதரவளித்துள்ளார்கள். இக் கருத்துக் கணிப்பு தொழிற் கட்சியின் மிகப் பிரதான வாக்காளர்களான நடுத்தரவர்க்க மக்களிடையே மேற்கொள்ளப்பட்டது. அரசிற்கு கிடைத்துள்ள இந்த ஆதரவை அது நிச்சயம் பயன்படுத்திக் கொள்ளும் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

அரச உதவிகள் சிலரை சோம்பேறிகளாகவும் சிலரை சுரண்டி வாழ்பவர்களாகவும் மாற்றுவதாக வரிசெலுத்தும் உழைக்கும் மக்கட் பிரிவினர் தெரிவிக்கின்றனர். அதனால் புதிய நூற்றாண்டில் உதவிநலத் திட்டம் முழுமையாக மாற்றி அமைக்கப்படும் என்று சமூக சுகாதாரச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் ப்பிளெக் பூலில் இடம்பெற்ற கொன்செவேடிவ் கட்சி மகாநாட்டில், அக்கட்சியினரும் உதவிநலத் திட்டம் பற்றிய தமது கொள்கையை வெளியிட்டுள்ளனர். அவர்களது கொள்கைப்படி வயதுள்ளவர்களும் உடல்நலம் உடையவர்களும் கட்டாயமாக உழைக்க வேண்டும். வேலை இழப்பவர்களிற்கு 2 மாதத்திற்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்படும். அதற்குள் அவர்கள் தமக்கு ஏற்ற வேலையை தேடலாம். அப்படி அந்த காலத்திற்குள் தேட முடியாவிட்டால்; அவர்கள் உதவித் தொகை வழங்கும்; வேலை முகவர்கள் சிபார்சு செய்யும்; எந்த வேலையையும் செய்ய வேண்டும்.

மேலும் உதவித் தொகை பெறுபவர்கள் தினமும் வேலை முகவர் நிலையத்திற்கு சென்று கையொப்பம் இடவேண்டும். இவற்றிற்கு அமைய செயற்படாதவர்களது உதவித் தொகை முற்றாக நிறுத்தப்படும் என கட்சி கொள்கை உறுதியாக தெரிவிக்கிறது. கட்சி பேச்சாளர்கள் மேலும் குறிப்பிடுகையில் வேலை செய்வதற்கான ஆற்றல் உடையவர்கள் யாரும் வரிசெலுத்துவோரில் தங்கியிருக்க அனுமதிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் இப்படியாக உதவிநலத் தொகையை குறைப்பதால் பெறப்படும் பணத்தை கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டிற்கு பயன்படுத்தப் போவதாகவும்; வேலை செய்பவர்களது வரியை குறைக்கப் போவதாகவும் கொன்செவேடிவ் கட்சி தனது கொள்கைத் திட்டத்தில் கூறியுள்ளது.

கொன்சவேடிவ் கட்சியின் பிரகடனத்தை உடனடியாக அமுல்படுத்த தயாராகிவிட்டது தொழிற்கட்சி. மோசடி செய்து உதவிநலம் பெறுகிறார்கள் என்று சந்தேகிக்கப்பட்டால்; அவர்களை தினமும் கையொப்பம் இட வைக்கப்போவதாக, உதவிநல வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் வேலையற்றோர் கட்டாய கணணிபயிற்சி வகுப்புகளிற்கு செல்ல வேண்டும்; இல்லையேல் உதவித் தொகையை இழக்க வேண்டி ஏற்படும் என்று தெரிவித்துள்ளார், கல்வி அமைச்சர் டேவிட் பிளங்கேற்.

பல ஆண்டுகளாக மக்களின் வரிப்பணத்தில் இருந்து கொண்டு அரசை ஏமாற்றும் போலிகளிற்கு எதிராக; கடும் நடவடிக்கை எடுக்க இரு கட்சி அரசியல்வாதிகளும் முனைப்புடன் உள்ளனர். சட்ட விரோதமாக வேலை செய்து கொண்டு உதவித் தொகையையும் பெற்றுக் கொண்டு இருப்பவர்கள் பற்றிய புகார்கள் நிறைந்து உள்ளதாகவும்; இவற்றிற்கு முடிவு கொண்டுவரப்படும் என்றும் உதவிநல மோசடி விசாரணை அமைப்பு கூறியுள்ளது. கறுப்புப் பொருளாதாரம் என்று அழைக்கப்படுகின்ற சட்டவிரோத வருமானங்களை கண்டுபிடிக்க உதவிநல உத்தியோகஸ்தர்களிற்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பம் என தெரியவருகிறது. உதவித் தொகை பெறுபவர்களது வீடுகளைத் திறந்து சோதனையிடவும் அதிகாரம் அளிக்கப்பட உள்ளதாக செய்திகள் கசிந்துள்ளன. மேலும் நவம்பர் முதல் வாரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவு அறிக்கையில்; கறுப்புப் பொருளாதாரத்தில் இருந்து கைப்பற்றும் பணத்திலேயே, அரச சேவைகளிற்கான செலவீனத்தை வழங்க போவதாக கூறி உள்ளார் நிதி அமைச்சர் திரு கோடன் பிறவுன் அவர்கள்.

மேற்குறிப்பிட்ட கருத்துக் கணிப்பில் கேட்கப்பட்ட கேள்விகளும் பெறப்பட்ட பதில்களும்

வேலை செய்யக் கூடிய ஒருவார் அரச உதவியில் தங்கியிருந்தால் உதவித் தொகையை வெட்டலாமா?

அறிவுசார் தொழிலாளர்கள்
ஆம் 66%
இல்லை 20%
தெரியாது 14%

பகுதி அறிவுசார்ந்த மற்றும் உடல் உழைப்பாளர்கள்
ஆம் 62%
இல்லை 24%
தெரியாது 14%

உதவிநல கொடுப்பனவுகள் வெகுவாக கட்டுப்படுத்தப்பட வேண்டும் ?

அறிவுசார் தொழிலாளர்கள்
ஆம் 84%
இல்லை 8%
தெரியாது 6%

பகுதி அறிவுசார்ந்த மற்றும் உடல் உழைப்பாளர்கள்
ஆம் 74%
இல்லை 10%
தெரியாது 15%

NIRALA
SWEET MAHAL
316 HIGH STREET NORTH, LONDON-E12 6SA
TEL: 0181 548 1303
FAX: 0181 548 1363

HARAN BROTHERS
மீண்-மரக்கறிவகைகள்-குடிவகைகள்-பலசரக்கு
சமான்கள் மலிவு விலையில் கிடைக்கும்
245 LONDON ROAD, CROYDON CR0 2SG
TEL: 0181 689 1378

# தண்டிக்கப்படுவாரா Pinochet?

(இலண்டன், 04 ஒக்) - தென் அமெரிக்காவில் உள்ள சிலியின் முன்னாள் சர்வாதிகாரியும் இராணுவத் தலைவருமான, இவர் கடந்த ஆண்டு ஓகஸ்ற் 16ல் மருத்துவ சிகிச்சைக்காக இலண்டன் வந்திருந்த போது; தனது ஆட்சிக் காலத்தில் செய்த சித்திரவதை மற்றும் கொலைகளிற்காக கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். இவர் மீது பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளிலும் வழக்கு உண்டு. இவரை ஸ்பெயினிற்கு நாடுகடத்தி; அங்கு விசாரணையை தொடர அனுமதி வேண்டி தொடரப்பட்ட வழக்கு; செப்ரம்பர் மாதம் 27ம் திகதி ஆரம்பமானது. இது முன்னாள் அதிகாரிக்கு பாதகமாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது 83 வயதுடைய அந்த அதிகாரி ஆட்சியில் இருந்தபோது; 3000 பேர் வரை சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டனர். அன்றைய அக் கொடூரத்திற்கு எதிராக அணிவகுத்தவர்களில் இன்றைய உள்துறை அமைச்சர் Jack Straw ம் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Pinochet கைது செய்யப்பட்டது மனித உரிமை நிறுவனங்களிற்கு கிடைத்த வெற்றியாகும். இவர் தண்டிக்கப்படுவாராய் இருந்தால், அது இரட்டிப்பு வெற்றியாகும். இலங்கையிலும் கடந்த 17 ஆண்டுகளில் 60,000 ற்கு அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இங்குள்ள யுத்தக் குற்றவாளிகளும் அம்பலப்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். மேலும் சில குற்றவாளிகள் பிரித்தானியாவில் உள்ளனர். அவர்கள் ஆதாரங்கள் இன்மையால் தப்பித்துள்ளனர். ஓர் நாள் வரலாற்றின் கடந்த பக்கங்கள் புரட்டப்பட்டு அவர்களும் தண்டிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையை; குற்றம் புரிந்து 25 ஆண்டுகளிற்கு பின் கைது செய்யப்பட்ட Pinochet ன் வரலாறு கொடுக்கிறது.

# உள் ஆடையில் மோகம் - தமிழ் வாலிபர் கைது !

(அல்பேட்டன், 18 செப்) - அல்பேட்டனைச் சேர்ந்த நடராஜா ஜெயக்குமார் திருட்டுக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார். அந்நபர் இதற்கு முன்பும் ஓர் தடவை அதே குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு எச்சரிக்கப்பட்டிருந்தார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, மேற்குறிப்பிட்ட நபர் பெண்களின் உள் ஆடைகளில் மோகம் கொண்டவர் என்றும், அவற்றை திருட்டுத்தனமாக தனதாக்கிக் கொள்கின்றவர் என்றும் தெரியவந்துள்ளது. கடந்த கோடை கால வெய்யிலில் வெளியே உலரவைத்த உள்ளாடைகள் எத்தனை இவர் கண்ணில்பட்டது என்பது அவருக்கு மட்டும்தான் தெரியும். கிடைக்கப்பட்ட தகவல்களின் படி கடந்த மூன்று ஆண்டுகளில் இவர் £50,000 பெறுமதியான உள் அங்கிகளை களவாடி உள்ளார்.

இந் நபர் வீட்டிற்கு அயல் வீட்டில் உள்ள பெண்கள் உலரவைத்த அவர்களது உள் ஆடைகளை களவாடி உள்ளார். அவர்களது உள் அங்கிகள் அடிக்கடி காணாமல் போகவே இதனை அறிய, அவர்கள் சம்பவ தினம் தமது உள் அங்கிகளை உலரவைத்துவிட்டு மோப்ப நாயை வைத்து கண்காணித்தனர். இதனை அறியாத அந்த இளைஞ்ஞன் அவர்களிடம் முறையாக மாட்டுப்பட்டுக் கொண்டார்.

இது ஓர் கொடூரமான குற்றமாக இல்லாமல் துர்நடத்தையாகவே கருதப்படுகிறது. இது கவனிக்கப்பட வேண்டிய சிக்கலான மனநோய். இப்படியானவர்களிற்கு உடலுறவின் போது கிடைக்கும் இன்பத்திலும் காட்டிலும் பெண்களது உள் ஆடைகளை அணிவதிலும் அதனை நுகர்வதிலும் கூடிய இன்பம் அடைவார்கள். இப்படியானவர்கள் சிலர் எமது சமூகத்திலும் இருக்கிறார்கள். அவர்கள் தமது பிரச்சனையை மனம் திறந்து ஓர் சிறந்த மனோதத்துவ நிபுணரிடம் கூறி, ஆலோசனை பெறுவது நன்மை பயக்கும்.

# காதலா! இன்பமா!! நரகமா!!!

# Hollywood ல் தமிழ் நாதம்

(இலண்டன், 05 ஒக்) - மேற்கத்தைய இசையுடன் கீழைத்தேய இசையை இணைத்து; உலகளாவிய அளவில் தமிழை பரவவிட்டு, தமிழிற்கு பெருமை சேர்த்துள்ளார் மாணிக்கம் யோகேஸ்வரன். கடந்த செப்ரம்பர் மாதம் வெளிவந்து உள்ள EYES WIDE SHUT ல், தன் கானத்தால் இப் படத்தின் இயக்குனர் ஸ்ரான்லி க்யூபிறிக் உட்பட இசை உலகத்தையே ஆனந்தப்பட வைத்துள்ளார். இவர் சன்றைஸ் வானொலியில் நடாமோகனிற்கு அளித்த பேட்டியில் "எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், தமிழை என் இசையுடன் கலந்து; உலகின் மூலை முடுக்கெல்லாம் பரப்புவேன்" என்று தமிழ் பேசும் உலகிற்கு உறுதி அளித்துள்ளார். Hollywood ல் பாடியது அவருடைய முதல் முயற்சியல்ல. ஈழத்தில் இருந்து இவர் புலம்பெயர்ந்த போதிலும்; தனது இசைப் பணியை தொடர்ந்து கொண்டே இருக்கின்றார். இன்று மேற்குலகின் முன்னணி இசைக் குழுக்களுடன் இணைந்து கிழக்கையும் மேற்கையும் சங்கமிக்க வைக்கின்றார். இத்திரைப்படம் திரைக்கு வந்த சில நாட்களிலேயே இயக்குனர் ஸ்ரான்லி க்யூபிறிக் இயற்கையெய்தினார். இவர் மறைந்தாலும் திரை உலகில் இவர் என்றும் வாழ்ந்து கொண்டு தான் இருப்பார். மேலும் தமிழ் நெஞ்சங்களும் இவரை நினைவு கூரும்.

# இந்தியப் பெண் சித்திரவதை

பரிஸ், 22 செப்) - பரிஸ் அரசதரப்பு சட்டத்தரணிகள் இந்திய அரசியல் அவதானி ஒருவருக்கு எதிராக குற்றவியல் விசாரணை ஒன்றை முடுக்கிவிட்டுள்ளனர். இது டில்லிக்கும் பரிஸிற்கும் இடையில் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்திய அரசியல் அவதானியின் கீழ் தொழில் புரிந்த லலிதா ஓர்மன் என்ற பெண்ணை; சித்திரவதைக்கு உட்படுத்தியதற்கு எதிராகவே அரசியல் அவதானியின் மீது புலன்விசாரணை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தன்னை கூரிய ஆயுதத்தால் தாக்கியதாக கூறிய லலிதா; மேலும் தறிப்பிடுகையில் தனக்கு போதை மருந்து ஊட்டியதாகவும் தனக்கு கருத்தடை செய்ய முயற்சித்த போது தான் தப்பிவிட்டதாகவும் தறிப்பிட்டுள்ளார்.

இது பற்றி கருத்து வெளியிட்ட இந்திய அதிகாரிகள், பரிஸ் செய்தி ஸ்தாபனங்களை சாடியுள்ளனர். செய்தி ஸ்தாபனங்கள் அளவிற்கு அதிகமான முக்கியத்துவத்தை அளிப்பதாக இந்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மேலும் லலிதாவை தம்மிடம் ஒப்படைக்கும் படியும் இந்திய அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்திய அவதானிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் அது இந்தியாவிற்கு சர்வதேச அரங்கில் மிகுந்த அவமானத்தை ஏற்படுத்தும்.

# துகில் உரியும் மதவெறி

இந்தியா, 01 ஒக்) -செப்ரம்பர் இறுதிப் பகுதியில் இரண்டு கிறிஸ்தவ சகோதரிகளை கத்தி முனையில் பயமுறுத்தி, அவர்களது ஆடைகளை களைந்து தெருவில் விட்டதாக தெரியவருகிறது. சம்பவத் தினத்தன்று அவ் இரு சகோதரிகளும் மதப் பிரச்சாரம் செய்யப் புறப்பட்டதாகவும் செல்லும் வழியிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. இந்தியாவில் மிகவும் பின்தங்கிய மாநிலங்களில் ஒன்றான பீகாரிலேயே சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பல்லின மத மக்கள் வாழும் இந்தியாவில் இப்படியான சம்பவங்கள் வெவ்வேறு இன மத மக்களிடையே விரோதங்களை வளர்த்து இனமத கலவரங்களை தோற்றுவிக்காலாம் என்று அஞ்சப்படுகிறது.

# இந்திய அரசியல் சூழல்

## இராவணன் ஆண்டால் என்ன துரியோதனன் ஆண்டால் என்ன ?

சென்னை, 05 ஒக்) - இந்தியா சுதந்திரம் அடைந்தபின் இன்னுமொரு தேர்தலும் வந்து சென்றுவிட்டது, என்று அலுத்துக் கொள்ளும் அளவில் தான் கடந்த இந்தியத் தேர்தல் நடந்ததாக இந்திய Mtv வெளியிட்ட பேட்டிகள் வெளிப்படுத்துகின்றன. பேட்டிகளின் சாரம், இன்றைய இளம் தலைமுறை இந்தியர்கள், இந்திய அரசியலில் ஆர்வமற்றவர்களாய் இருக்கின்றனர் என்றே தெரிவிக்கின்றது. தேர்தல் பற்றி பேட்டியாளர் கேட்ட போது "காலையில் எழுந்து, வரிசையில் காத்திருந்து வாக்களிக்குமளவிற்கு; இத் தேர்தல்கள் எந்த மாற்றத்தையும் எனது வாழ்க்கையில் கொண்டுவரப் போவதில்லை" என்று உறுதியாக பதிலளித்தார் அந்த இந்தியப் பிரஜை.

மேலும் ஓர் இளம் பெண் கருத்துத் தெரிவிக்கையில், "ஓய்வு பெறவேண்டிய பழைய அரசியல்வாதிகள் தொடர்ந்தும் அரசியலில் ஒட்டிக்கொண்டிருப்பதால்; இளைய தலைமுறையினரின் பிரதிநிதித்துவம் வெகுவாக பாதிக்கப்படுகிறது" என்றார். அவர் மேலும் கூறுகையில் இளம் தலைமுறையினர் பிரதிநிதித்துவம் பெறாததால் புதிய கருத்துக்களுக்கும் சிந்தனைகளிற்கும் இடமில்லாமல் போய்விடுகிறது என்றார்.

ஆனால் மெதுமெதுவாக தொழில்நுட்பம், தகவல்துறை, பொருளாதாரம் ஆகியவற்றில் ஏற்படும் வளர்ச்சி ஆரோக்கியமான வாக்காளர்களை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாற்றங்கள் உடன் ஏற்படாதுவிடினும் நம்பிக்கையின் கீற்றுக்கள் தெரியத் தொடங்கியுள்ளன.

# குருஷேஸ்திரத்தில் அல்ல படுக்கை அறையில் பகவத்கீதை

(அமெரிக்கா, 15 செப்) - EYES WIDE SHUT திரைப்படம் பற்றி ஓர் பாரிய விமர்சனம் எழுந்தது. இப்படத்தில் வரும் பாலியல் காட்சி ஒன்றில், "எங்கெங்கெல்லாம் அநியாயம் நிகழ்கிறதோ! அப்போதெல்லாம் நான் அவதாரம் எடுத்து, நியாயத்தை நிலைநிறுத்துவேன்" என்று கிருஷ்ணபரமாத்மா அர்ச்சுனனிற்கு கூறிய; பகவத் கீதையில் உள்ள வசனம் பின்னணியாக வருகிறது. இந்தப் பின்னணி வாக்கியம் இந்து சமூகத்தினரிடையே பாரிய அதிருப்தியை ஏற்படுத்தியது. அமெரிக்காவில் இயங்கும் இந்துக்கள் சபை இது பற்றி கருத்து வெளியிடுகையில், பைபிளிலோ, குர்ஆனிலோ வரும் வேத வாக்கியங்களை இவர்கள் இக் காட்சிக்கு போட்டிருப்பார்களா? என்று கேள்வி எழுப்பியது. "நாம் இந்து சமயத்தை கேவலப்படுத்தும் நோக்குடன் இதனை செய்யவில்லை; ஆனால் உங்களை அது துன்புறுத்தியிருந்தால் மன்னிக்கவும்" என்று கூறியது திரைப்பட நிர்வாகம். ஆனால் படம் முற்றுப்பெறும் நிலையில் இருப்பதால் நாம் எந்த மாற்றத்தையும் செய்யமுடியாது என்று உறுதியாக கூறிவிட்டனர். ஆனால் இந்து சபைகள் தமது அழுத்தங்களை கூட்டினர். அதுமட்டுமல்லாமல் இந்தியாவில் இத்திரைப்படத்தை தடைசெய்வதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் பின் நிர்வாகம் இந்துக்களின் கோரிக்கைக்கு பணிந்து; பகவத்கீதையின் வரிகளை அக்காட்சியில் இருந்து விலக்கிக் கொண்டது.

# மரண தண்டனை ராஜீவ் காந்தி கொலை குற்றவாளிகளிற்கு கருணைகாட்ட சோனியா காந்திக்கு மடல்

(இந்தியா, 10 நவ) - ராஜுவ் கொலை குற்றவாளிகளிற்கு மரணதண்டனையே தீர்ப்பு, என்பதை இந்திய மேல் நீதிமன்றம் ஒக்ரோபர் 8ம் திகதி உறுதிப்படுத்தி உள்ளது. இத் தீர்ப்பை ஆளும் கட்சியான பாரதிய ஜனதா கட்சி வரவேற்று உள்ளது. தீர்ப்பு பற்றி அறிக்கை வெளியிட்ட அக்கட்சி, இந்திய தேசத்திற்குள் எந்த அநியாயம் நிகழ்வதையும் நாம் அனுமதிக்க முடியாது; நடந்த கொடிய கொலைக்கு, இதுவே சரியான தண்டனையாக அமையும் என்று தெரிவித்து இருக்கிறது. ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும், பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் திரு ராமதாஸ் அவர்கள், குற்றவாளிகளிற்கு மணை தண்டனையை குறைத்து, ஆயுட் தண்டனை வழங்க சிபாரிசு செய்யும் படி, நவம்பர் 4ம் திகதி சோனியா காந்திக்கு எழுதிய மடலில் கேட்டு உள்ளார். சோனியா காந்தி அப்படி செய்வாராய் இருந்தால், நிச்சயம் மரண தண்டனை ஆயட் தண்டணையாக குறைக்கப்படும் என்றே எதிர்பார்க்கபடுகிறது. இப்போது குற்றவாளிகளது இறுதி முடிவு இந்திய ஜனாதிபதி திரு நாராயணன் அவர்களின் முடிவிலேயே தங்கி உள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபை, ஐக்கிய நாடுகள் அமைப்பு என்பன மரணதன்டனையை உடன் நிறுத்தும்படி அனைத்து நாடுகளையும் கோரியவண்ணமுள்ளன. அனால் உலகின் பெரிய ஜனநாயக நாடான இந்தியா இன்னமும் அதற்கு உடன்படவில்லை.

யூன் 1976 ற்கு பின் புத்தமதக் கொள்கைப்படி இலங்கையில் மரணதண்டனை வழங்குவது நிறுத்தப்பட்டது. ஆனால் கடந்த மார்ச் மாதத்தில் இருந்து, மீண்டும் மரணதண்டனை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. கொலை, தற்கொலைக்கு உதவுதல், போதைமருந்து கடத்துதல் ஆகிய குற்றங்களிற்கு மரணதண்டனை வழங்க இப்போதய சட்டம் இடம் அளிக்கிறது. இலங்கை போன்ற நாடுகளில் சாட்சிகளை உருவாக்குவதும் அழிப்பதும் சர்வசாதாரண விடயங்கள். இந்நிலையில் ஓருவரை சட்டப்படி கொலை செய்வதற்கு மரணதண்டனை அனுமதி வழங்கிவிடப் போவதாக மனித உரிமை அமைப்புகள் அஞ்சுகின்றன. மேலும் இச் சட்டத்தை பயன்படுத்தி அரசியல் கைதிகளையும் பழிவாங்க அரசு முயற்சிக்கலாம் என பரவலாக சந்தேகிக்கப்படுகிறது.

ஈழவிடுதலைப் போராட்டத்தை பொறுத்தவரை போராட்ட ஆரம்பகாலம் முதல் இன்று வரை மரணதண்டனை வழங்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. சாதாரண ஐஸ் பழ வியாபாரி முதல் மனித உரிமைவாதிகள் வரை நூற்றுக்கணக்கானோர் மரணதண்டனை விதிக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் இருவர் ஈழத் தமிழர், இருவர் இந்தியத் தமிழர் ஆவர். முருகன்(29), சாந்தன்(29) ஆகிய ஈழத்தை சேர்ந்தவர்களும் நளினி(34), பேரறிவாளன்(25) ஆகிய தமிழகத்தை சேர்ந்தவர்களுமே மரண தண்டணையை பெற்று உள்ளனர். குற்றவாளிகள் சார்பில் சிரேஸ்ட சட்டதரணி திரு நடராஜன் அவர்கள் ஆஜரானார். இவரிற்கு துணையாக சட்டதரணிகள் என் சந்திரசேகரன், சுந்தர் மோகன், வி இராமசுப்பிரமணியன் ஆகியோரும் ஆஜராகி இருந்தனர். மேல்தகு சட்டதரணி அல்ரவ் அகமட் அரசதரப்பில் ஆஜரானார். அவரிற்கு ஆதரவாக சென்னை மத்திய புலனாய்வு அமைப்பின் உதவி சட்ட ஆலோசகர் இ ஜெகப் ஆர் டானியல், சட்டதரணி சொலி ஜெ சோறப்ஜு ஆகியோர் ஆஜராகி இருந்தனர். இவ் வழக்கில் நிதிபதிகளாக கெ ரி தோமஸ், டி பி வட்த்வ, சயிட் சா மொகமட் ஆகியோர் இருந்தனர்.

திரு நடராஜன் அவர்கள் குற்றவாளிகளது குற்றங்கள் பற்றி எந்த ஆட்சேபனையையும் வைக்கவில்லை. அவர் குற்றவாளிகளது மரண தண்டனையை, ஆயுட் தண்டனையாக குறைக்கும் படியே நீதிமன்றத்தை கேட்டுக் கொண்டார். அதற்கு அவர் முன்வைத்த காரணம், நடந்து முடிந்த வழக்குகளில், இப்போது குற்றம் சுமத்தப்பட்ட எவர் மீதும், மக்களையோ குறிப்பிட்ட மக்கட் பிரிவினரையோ தாக்கியதாக குற்றம் சுமத்தப்படவில்லை. மேலும் இத் தாக்குதலிற்கு திட்டமிட்டவர்களும் தாக்குதலை நிகழ்த்தியவர்களும் இறந்துவிட்டார்கள். குற்றம் சுமத்தப்பட்டு உள்ள ஏழ்வரில் மூவரிற்கு ஆயட் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. இந்நிலையில் மீதமுள்ள இந் நால்வரிற்கும் ஆயட் தண்டனை வழங்கவும்; என்று கேட்டுக் கொண்டார்.

ஆனால் வழக்கு குற்றவாளிகளிற்கு எதிராகவே அமைந்தது. ஆனால் நளினிக்கு மரண தண்டனையை ஆயுட் தண்டனையாக மாற்ற அனுமதிக்கும் படி நீதிபதி ரி தோமஸ் தீர்ப்பு வழங்கி இருந்தார். நளினி சிறையில் இருக்கும் போது ஓர் பெண் குழந்தையை பெற்றுக் கொண்டார். அச் சிறு பெண் குழந்தையின் தாயும், தந்தையும் (முருகன்) சிறையில் மரணவாயிலில். இந் நிலையில் பிள்ளைக்கு கிடைக்க வேண்டிய தாயின் அரவணைப்பு கிடைக்கவில்லை. இத்துடன் அச் சிறு பிள்ளையின் மீது அனாதை வாழ்க்கை திணிக்கப்பட உள்ளது. அதனால் நளினிக்கு மரண தண்டனையை ஆயுட் தண்டணையாக மாற்ற வேண்டும் என்று தீர்ப்பு அளித்தார் நீதிபதி தோமஸ் அவர்கள். ஆனால் மற்றய இரு நீதிபதிகளும் மரண தண்டனையை வழங்கி தீர்ப்பு அளித்ததால், 2 : 1 என்ற விகிதத்தில் நால்வரிற்குமே மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டது.

NATRAJ
341 Northolt Road
South Harrow
Middx HA2 8JB



Tel: 0181 426 8903
Fax: 0181 248 22 55
Moby: 07808060433

The best in pure vegetarian Indian cuisine for:



weddings
parties
religious events
and
any special occasion

We have a vast selection of delicacies, indian sweets and savouries to take away.

Ring Natubhai

# Flying Tank அதி நவீன வான்படை

(இலண்டன், 05 ஒக்) - கடந்த வாரம் பிரித்தானியா தனது அதி சிறந்த தொழில்நுட்பம் கொண்ட உலங்கு வானூர்திகளை அறிமுகப்படுத்தி உள்ளது. இது அமெரிக்க Apache உலங்கு வானூர்திகளின் புதிய வடிவமைப்பாகும். அமெரிக்க தயாரிப்பான 2 Apache உலங்கு வானூர்திகள், கொசொவோவில் பயிற்சியின் போது விபத்துக்குள்ளானது தெரிந்ததே. ஆனால் இப்போதைய பிரித்தானிய தயாரிப்பு இவற்றை எல்லாம் வெற்றிகரமாக களைந்து சிறந்த படையணியாக திகழும் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

Flying Tank, பறக்கும் தாங்கி என்று அழைக்கப்படும்; இவ் வானூர்திகள் 67 வரை, £2.5 பில்லியன் செலவில் முதற் கட்டமாக உற்பத்தியாக்கப்பட்டு உள்ளன. மிக சக்தி வாய்ந்த, இவ் வானூர்திகளில் பொருத்தப்பட்டுள்ள ராடார் விடியோ கருவிகள் மூலம், விமான ஓட்டிக்கு 2 மைல்களுக்கு அப்பாலுள்ள; எதிரிப்படை தளபதியின் கையிலுள்ள, வரைபடத்தை கூட சரியாக பார்க்க முடியும். கூடிய தூரத்தில் மறைந்து இருந்து கொண்டே ஓர் நகரம் முழுவதையும் அழிக்கும் அளவிற்கு இவ் வானூர்திகளில் குண்டு வீசும் அற்றலும் சுடுதிறனும் உண்டு. Flying tank அணி RAF's Pumas படைப்பிரிவுடன் இணைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இச் சக்தி வாய்ந்த வான் படையணியின் வருகையை தொடர்ந்து பிரித்தானிய பாதுகாப்பு திட்டமிடலில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இப் படை அணி 2001ல்லேயே சேவையிலீடுபடுத்தப்படும்.

பறக்கும் தாங்கியின் வருகை பிரித்தானிய பாதுகாப்புப் படைக்கும் உற்பத்தியாளர்களிற்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளித்தாலும்; உலகின் மறுபகுதியில் இவை எதிர்மறையான விளைவை ஏற்படுத்தி உள்ளது. மூன்றாம் உலக நாடுகள் பலவற்றில் இன ஒடுக்குமுறை காரணமாக உள்நாட்டு யுத்தமும் இன்னும் சில நாடுகளில் இராணுவ அல்லது சர்வாதிகார ஆட்சியும்; இவற்றுடன் எல்லை யுத்தமும் நடைபெறுகிறது. இம் மூன்றாம் உலக நாடுகள் எல்லாம் இத் தொழில்நுட்பத்தை தமக்கு எதிராக குரல் எழுப்பும் மக்கள் மீதும் புரட்சியாளர்கள் மீதும் நிச்சயம் திருப்பும். இது தான் இன்று வரை இந்தோனேசியா, ஸ்ரீலங்கா உள்ளிட்ட நாடுகளில் நடந்து கொண்டிருக்கிறது. இங்கெல்லாம் ரொபின் குக் இன் Ethical Foregin Policy செல்லவில்லை.

பிரித்தானியாவிடம் இருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்யும் நாடுகளில் இலங்கையும் ஒன்று. இலங்கைக்கு பிரித்தானியா துணை இயந்திரத் துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள், கிறனைட்கள், பிஸ்டல்கள், கலவரத் தடுப்பு உபகரணங்கள் ஆகியனவற்றை இப்போதும் விற்பனை செய்கிறது.

## மணித்தியாலத்திற்கு £ 1.50

## பிரித்தானிய புடவை தொழிற்சாலையில் அநியாயம்

(லெய்ஸ்ரர், 15 ஒக்) - லெய்ஸ்ரரில் உள்ள புடவைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்கள், மணித்தியாலத்திற்கு £1.50 மட்டுமே பெற்றுக் கொள்கிறார்கள் என்று தெரிய வந்துள்ளது. இவர்கள் அனைவருமே ஆசிய நாட்டவர்கள். மேலும் இவர்கள் நீண்ட மணித்தியாலங்கள் வேலை செய்கிறார்கள்(10 - 16 மணித்தியாலங்கள்); ஆனால் இவர்களிற்கு இடைவேளை வழங்கப்படுவதில்லை என்றும் தெரியவந்துள்ளது. மேலும் வேலை செய்வதற்கு சௌகரியமான இடமோ அல்லது விபத்து ஏற்படாமல் பாதுகாப்பதற்கான ஒழுங்குகளோ செய்து கொடுக்கப்படவில்லை. அத்துடன் எப்போதும் வேலையால் நீக்கப்படும் அபாயமும் உண்டு.

லெய்ஸ்ரர் பிரித்தானியாவின் புடவைத் தொழில் மையமாகும். இங்கிருந்து தான் பிரித்தானியாவின் முன்னணி புடவை நிறுவனங்களான Marks & Spencer, C&A போன்றவற்றிற்கான ஆடைகள் தைக்கப்படுகின்றன. பிரித்தானியாவில் குறைந்த சம்பளம், £3.60 வழங்கப்பட வேண்டும்; என்ற சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 6 மாதங்களாகியும், இங்கு அதனை வழங்கவில்லை. அத்துடன் இங்கு சம்பளச் சீட்டுக்கள் எதுவும் வழங்கப்படுவதில்லை. அப்படி வழங்கப்பட்டாலும், தொழிலாளர்களது நீண்ட மணித்தியாலத்தை, தமது குறைந்த சம்பளத்தால் பெருக்கி வரும் தொகையை, அடிப்படைச் சம்பளமான £3.60 ஆல் வகுத்து, குறைந்த மணித்தியாலத்தை பதிவு செய்கிறார்கள்.

இங்கு தொழில் புரிபவர்கள் சிலர் 10 ஆண்டுகள் வரை தொடர்ந்திருக்கிறார்கள். தமது சமூகத்துடனேயே வாழ்வதால், இவர்கள் ஆங்கிலம் பேசத் தெரியாதவர்களாகவும் இருக்கிறார்கள். ஆதலால் தம்மை விடுவித்துக் கொள்ள இவர்களால் முடியவில்லை. மேலும் அடிப்படைச் சம்பளம் பற்றியும் இடைவேளை பற்றியும் கேட்டவர்கள் வேலையால் நிறுத்தப்பட்டு உள்ளனர். இது மற்றவர்களையும் கேட்கவிடாமல் செய்துவிடுகிறது. இப்போது தொழிற்சங்கம், புடவைத் தொழிற்சாலை தொழிலாளர்களது நிலையை விசாரித்து வருகிறது. தமது முதலாளிகளிற்கு எதிராக வழக்கிட துணிபவர்களிற்கு, நஸ்டஈடும் பெற்றுக் கொடுக்கப்படும் என்று தெரிகிறது.

இங்குள்ள நிலைமையே இப்படியிருந்தால், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ் போன்ற நாடுகளில்; இப்புடவை நிறுவனங்களிற்கு ஆடை தைக்கும் அத் தொழிலாளர்களது நிலை என்ன? அந் நாடுகளில் இருந்து இங்கு வரும் ஆடைகள், மற்றும் இறக்குமதிப் பொருட்கள் உற்பத்தி இடங்களில், தொழிலாளர் நலன் பேணப்படுகிறதா? என்பது சுதந்திர கண்காணிப்பு அமைப்பினால் கண்காணிக்கப்படுகிறது. மேலும் பொருட்களின் சீட்டில் அவற்றின் உற்பத்தியிடமும் அடக்கப்பட வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. இது நுகர்வோர் தாம் வாங்கும் பொருளில் அதனை தயாரித்த உற்பத்தியாளரிற்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்ய சந்தர்ப்பம் கொடுக்குகிறது. (Ethical Trade.)

# ஆண்களிற்கு கருத்தடை மாத்திரை

(அமெரிக்கா, 18 ஒக்) - பெண்களுக்கே இதுவரை வழங்கப்பட்டு வந்த கருத்தடை மாத்திரைகள், எதிர்காலத்தில் ஆண்களுக்கும் கிடைக்க உள்ளது. மறக்காமல் மாத்திரை எடுக்க வேண்டுமே என்று சலித்துக் கொள்ளும் பெண்கள் இனிமேல் தம் துணைவரை மறக்காமல் மாத்திரை எடுக்கச் சொல்லப் போகிறார்கள்.

இந்த கருத்தடை முறையின் அடிப்படை, விந்துக்களை பருமனாக்குவதன் மூலம் அவற்றை முட்டையினுள் செல்ல இயலாமல் செய்வது. ஆதாவது விந்துக்களை பருமனாக்குவதன் மூலம் அவற்றை பயனற்றதாக்குவது.

New York University School of Medicine ல் கருவளத் துறை நிபுணரும் பேராசிரியருமான Susan Benoff இதனைப் பற்றி மேலும் விளக்குகையில், பொதுவாக பயன்படுத்தும் மாத்திரைகள் (உ-ம் high blood pressure , migraine(தலையின் ஒரு பக்கத்தில் மட்டும் ஏற்படும் வலி ஆகியவற்றிற்கு பயன் படுத்தப்படும் மாத்திரைகள்) விந்தில் கொலஸ்திரோலை சேர்த்து அதனை பருமனடைய வைத்து அவற்றை பயனற்றதாக்குகின்றன என்று கூறியுள்ளார். ஆனால் இவை நுணக்குக் காட்டியில் பார்க்கும் போது வழமையான விந்துக்களாகவே தோண்றும் என்றும் குறிப்பிட்டுள்ளார். விந்துக்களில் மாத்திரையால் ஏற்படும் மாற்றம் மீள்நிலைக்கு கொண்டு செல்லக் கூடியது என்றும் முற்றிலும் பாதுகாப்பானது என்றும் விரிவுரையாளர் உறுதி அளித்துள்ளார்.

# சட்டம் நிறம் பார்த்ததா ?

## குழந்தை கொலைக்கு 25 வருட சிறை

(சன் டியகோ, 15 ஒக்) - சன்டியகோவில் பிரித்தானிய சீக்கியரின் குழந்தைக் காப்பகத்தில் இருந்த, 13 மாதமே உடைய ஒலிவர் சிமித் கடந்த ஜூனில் இறந்து போய்விட்டார். இக் குழந்தையை மன்ஜிற் கஉர் பசுற்றா(44) பொறுப்பு ஏற்று, பராமரித்து வந்தார். ஒக்ரோபர் முதலாம் திகதி மன்ஜிற் கஉர் பசுற்றா தான் குழந்தையை குலுக்கி கொலை செய்தார் என்று நீதிமன்றம் குற்றம் கண்டுள்ளது. அவரிற்கு 25 ஆண்டுகள் சிறைத் தண்டணை வழங்கவும் நீதிமன்றம் உத்தரவு இட்டு உள்ளது. தீர்ப்பு கூறிய நீதிபதி வில்லியம் கென்னடி " இது ஓர் சிறைத் தண்டணைக்கான குற்றம் என்றும் பிரதிவாதிக்கு ஓர் இருண்ட பக்கமும் உண்டு" என்றும் கூறினார். நீதிபதியின் தீர்ப்பும் இந்த விமர்சனமும் அமெரிக்க சட்டம் பற்றிய பலத்த சந்தேகங்களை எழுப்பி உள்ளது

இக் கொலை பற்றிய ஆரம்ப விசாரணையின் போது, குழந்தை இறந்த சமயம் பசுற்றா அவ்விடத்தில் இருக்கவில்லை; என்றும் குழந்தை தானாகவோ அல்லது இன்னோர் குழந்தை தள்ளிவிட்டோ ஏற்பட்ட விபத்தில் தான் இறந்து போனதாக; பசுற்றாவிடம் வேலை பார்த்த, குவாத்தமாலாவை சேர்ந்த பெண் சாட்சி அளித்தார். ஆனால் இவர் சட்டவிரோதமாக அமெரிக்காவினுள் நுழைந்து; பசுற்றாவிடம் வேலை செய்தார். பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது, தான் முதலில் அளித்த சாட்சியம் பொய்யானது என்று தெரிவித்திருக்கிறார். ஒலிவருடைய நப்பியை மாற்ற பசுற்றா தயாரான போது, ஒலிவர் குழப்படி செய்தார்; அதனால் கோபத்தில் குழந்தையை கடுமையாக குலுக்கி கொலை செய்ததாகவும் அப் பெண் கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில், தான் சட்டவிரோதமாக இருப்பதால் தன்னை காட்டி கொடுத்து; அமெரிக்காவில் இருந்து திருப்பி அனுப்பிவிடுவோம் என்று பயமுறுத்தியதால் ஆரம்பத்தில் தான் பொய்சாட்சி அளித்ததாக கூறியுள்ளார்.

வழக்கின் போது வெளியான இன்னுமோர் விடயம், பசுற்றாவின் அரசியல் தஞ்ச விண்ணப்பம். கென்யாவில் இருந்து பிரித்தானியாவிற்கு குடியேறிய பசுற்றா குடும்பம் 1989ல் அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கோரினர். பசுற்றா தனது தஞ்சக் கோரிக்கையில், தான் இந்தியாவில் சீக்கிய விடுதலை அமைப்புகளிற்கு ஆதரவு வழங்கியதாகவும் தன்னை இந்திய இராணுவம் சித்திரவதை செய்து பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தியதாகவும் கூறியுள்ளார். ஆனால் இவர் ஓர் தடவை கூட இந்தியாவிற்கு செல்லவில்லை என்பது இப்போது தெரியவந்துள்ளது. ஆனால் அவர் இந்தியக் கடவுப்பத்திரம் வைத்துள்ளார். இ்.தானது அவரை பொய் பேசுபவராக ஜூரிகள் முன்

(Contd on Page 10 )

HAPPY TEXT

அதி நவீன வேலைப்பாடுடன் கண்ணை கவரும் 22காரட் சிங்கப்பூர் தங்க நகைகள். தாலிக்கொடி சங்கிலி கைச்சங்கிலி வளையல்கள் மோதிரங்கள். பந்சாயுதம் முத்துச்சங்கிலிகள் இன்னும் பல யாவும் மலிவு விலையில்.

இந்தியாவில் தருவிக்கப்பட்ட றியல் காஞ்சிபுரம் பனாறிஸ் பஞ்சாபி சூட்டுகள் சிறிலங்காவில் இருந்து ப.சாரங்கள் ப.கவுன் பிறசியர்கள் சிங்கப்பூர் ரெடிமேட் ஆடை வகைகள் மற்றும் Rice cooker Ana - Digital பிரேசர் மணிக்கூடுகள் கொளோன் வகைகள் இன்னும் பல.

வாருங்கள் வந்து பாருங்கள்!

திங்கள் தவிர்ந்த ஏனையநாட்கள் மத்தியானம் 12 தொடக்கம் 7.30 மணிவரை திறந்திருக்கும்.

165 UPPER TOOTING ROAD,
TOOTING SW TDJ,
LONDON
TEL: 0181 6823958

3 CLAYTON AVE ALBERTON,
WEMBLEY 4AO 4JY,
LONDON
TEL: 0181 9030 782
FAX: 0181 903 5119

# ஆயிரக்கணக்கில் இந்தியர்கள் வெளியேற்றம்

(கென்யா-உகண்டா, 20 ஒக்) - கென்யா, உகண்டா ஆகிய ஆபிரிக்க நாடுகளில் இருந்து மீண்டும் இந்தியர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இம்முறை கலவரம் ஆரம்பமாவதற்கு முன்னர் தாமாகவே வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளாக அவ்விரு நாடுகளினதும் பொருளாதார வளர்ச்சியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. வழமைபோல் இப்பின்னடைவிற்கு அங்கு குடியேற்றப்பட்ட இந்தியர்களே காரணம் என அந் நாட்டு மக்கள் நம்புகின்றனர். ஆனால் இந்தியர்களோ கொங்கோ குடியரசின் யுத்த்தில் இந் நாடுகள் தலையீட்டியதால் தான் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கின்றனர். எது எப்படியாயினும் பாதிக்கப்பட்டது இந்தியர்களே.

1972ல் இடிஅமீன் ஆட்சியில் இந்தியர்கள் நாட்டைவிட்டு விரட்டப்பட்டனர். பின்னர் 1986ல் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த வேளையில், மீண்டும் இந்தியர்களை நாட்டிற்கு திரும்பி வந்து; அவர்களது வியாபாரத்தை தொடர அழைப்பு விடுத்து நேசக்கரம் நீட்டியது அன்றைய அரசு. சிலர் மீண்டு வந்தும் இருக்கிறார்கள். ஆனால் தற்போதைய நிகழ்வுகள் என்றென்றைக்கும் அவர்கள் திரும்பி வராமல் இருப்பதற்கான வரலாற்று வடுவாக இருக்கப் போகிறது.

கென்யாவில் இந்தியர்கள் வியாபாரம் செய்வதை கட்டுப்படுத்த வேண்டும் என்று அங்குள்ள வர்த்தக சங்கம் கோருகிறது. ஏறக்குறைய 150,000 இந்தியர்கள் அங்கு வாழ்கிறார்கள். அவர்களின் முக்கிய தொழில்களில் வியாபாரம் முதலானது. அதனால் மேற்படி இரு நாடுகளில் இருந்தும் இந்தியர்கள் அமெரிக்கா பிரித்தானியா மற்றும் மேற்கு நாடுகள் நோக்கி பயணமாகின்றனர்.

இந்தியாவிற்கு வெளியே, இந்தியர்கள் கூடுதலாக உள்ள நாடுகளில் கென்யா, உகண்டா ஆகிய நாடுகளும் அடங்கும். கிட்டத்தட்ட ஓர் நூற்றாண்டிற்கு முன் குடியேற்றப்பட்டவர்கள்; ஓர் தடவை கூட இந்தியாவிற்கு சென்றிருக்கமாட்டார்கள். ஆயினும் இவர்கள் தாம் பிறந்த மண்ணில் மட்டுமல்ல, புலம்பெயர்ந்த மண்ணிலும் தம்மை இந்தியர்களாகவே இனம் காண்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது அவர்களிற்கு மிகுந்த சமூக அந்தஸ்தையும் சமூக பாதுகாப்பையும் கொடுக்கிறது. அன்று ஆபிரிக்காவில் இருந்து வந்தவர்கள் தான் இன்றைய மில்லியன் பவுண்களின் சொந்தக்காரர் என்பது யாவரும் அறிந்ததே.

## வீட்டில் கொண்டாட்டம், வெளியில் ஆர்ப்பாட்டம்

# சீனத் தலைவரும் அவர் மறுபக்கமும்

(சீனா, 19 ஒக்) - ஒக்ரோபர் முதலாம் திகதி சீனா தனது 50வது ஆண்டு சோசலிசப்புரட்சி நிறைவை வெகு சிறப்பாக கொண்டாடியது. இக் கொண்டாட்டத்தில் பாரிய இராணுவ அணிவகுப்பும் இடம் பெற்றது. இவ் அணிவகுப்பில் உலங்கு வானூர்திகள் தொடக்கம் SU27 யுத்த விமானங்கள் வரை இடம்பெற்றன. பலிஸ்ற்றிக் ஏவகனைகளும் அணிவகுப்பில் இடம்பெற்றது. இவை யாவும் சீனா தாய்வானிற்கு கொடுக்கும் எச்சரிக்கை சமிஞ்ஞைகள். தாய்வானை தனது பெருநிலப் பரப்புடன் இணைத்து விட வேண்டும் என்பதில் சீனா மிக உறுதியாக உள்ளது. அத்துடன் பல ஆண்டுகளாக சுயநிர்ணய உரிமை கோரும் திபெத் மக்களின் உரிமையை இன்றும் மறுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

ஒக்ரோபர் 18ல் ஐரொப்பிய சுற்றுப் பயணம் மேற்கொண்டு, நான்கு தினங்கள் இலண்டன் வந்திருந்த சீனத் தலைவரிற்கு, சென்ற இடம் எங்கும் எதிர்புக்கோசம். சீனாவின் மனித உரிமைமீறல்களை கண்டித்து, தாய்வான் மீதான சீனாவின் ஆக்கிரமிப்பு கொள்கையை எதிர்த்து, திபெத்தில் சீன இராணுவத்தின் ஆக்கிரமிப்பை எதிர்த்து என்று சீனத் தலைவர் வந்து இறங்கியதில் இருந்து; அவர் திரும்பிச் செல்லும் வரை, அவரிற்கு எதிர்ப்பு காட்டப்பட்டது. ஆர்ப்பட்டங்களிற்கு உணர்ச்சிவசப்படும் இவர்; சுவிற்சலாந்திற்கு சென்றிருந்த போது, அங்கு நடந்த ஆர்ப்பாட்டங்களை கண்டு கோபமடைந்து; சுவிஸ் இப் போராட்டங்களால் நல்ல நண்பரை இழந்துவிட்ட்து என்று கூறி இருந்தார். இப்படி ஓர் நிலை இலண்டனில் ஏற்பட்டு விடக்கூடாது; என்பதில் பிளயர் அரசு மிகக் கவனமாக இருந்தது. இவ் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதில் பொலிஸ் கடுமையாக நடந்து கொண்டது. இது பிரித்தானியாவின் ஜனநாயகம் பற்றிய மதிப்பீட்டை மிகவும் பாதித்து இருந்தது.

சீனாவின் தலைவர் ஒருவர் பிரித்தானியாவிற்கு வருவது இதுவே முதற்தடவை. சீனாவுடன் உறவுகளை வளர்த்து பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் பிளயர் அரசு குறியாக உள்ளது. மனித உரிமைமீறல்களை பெரிதுபடுத்தி உறவை மெலினப்படுத்த பிரதமர் ரொனி பிளயர் தயாரில்லை. அவர் கருத்துப்படி எதிர்பை மட்டும் காட்டுவதன் மூலம், சீனாவில் மனித உரிமைகள் வழங்கப்பட்டுவிடாது. பிரித்தானியாவும் சீனாவும் தமது வர்த்தகத்தை 25% அதிகரிக்க உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சீனா, உலக வர்த்தக சம்மேளனத்தில் (World Trade Organization) சேர அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. நிற்க.

50வது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களில் 500,000 மக்கள் கலந்து கொண்டனர். இவ் விழாவில் உரையாற்றிய ஆட்சி தலைவர் திரு ஜிஅங் செமின், சோசலிசம் தான் சீனாவை அபிவிருத்தி செய்யவும் பாதுகாக்கவும் ஒரே வழி என்பதை வரலாறு உணர்த்தி உள்ளது என்று குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில், அடுத்த 50 ஆண்டுகள் 'சோசலிச நவீனமயமாக்கல்' காலமாக அமையும் என்று தெரிவித்தார்.

உலகின் மிகப்பெரிய சனத்தொகை கொண்ட நாடான சீனாவும் கரீபியன் நாடான கியூபாவும் மட்டுமே சோசலிசத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளன. இந் நாடுகளும் இப்போது தமது பாதைதையை மாற்றிக் கொண்டு வருகின்றன. இவ் இரு நாடுகளும் தமது கொள்கையில் எவ்வளவு தூரம்? எவ்வளவு காலம்? ஊன்றியிருப்பர்கள் என்பது இன்று கேள்விக்குரிய விடயங்கள். இந் நிலை தொடருமானால் அடுத்த 50 ஆண்டுகளில் சோசலிசக் கொள்கை, இறந்த கொள்கையாக ஆகிவிடும். நூல்களிலும் அகராதியிலும் தான் சோசலிசத்தை பார்க்க முடியும்.

கிறிஸ்தவ மதத் தலைவர் பாப்பரசர் கியூபாவிற்கு விஜயம் மேற்கொண்டதும் ஆட்சித் தலைவர் திரு பிடல் கஸ்ரோ அவருக்கு அளித்த வரவேற்பும் இந் நூற்றாண்டில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வாக கருதப்பட்டது. ஏனெனில் உறுதியான சோசலிச கொள்கையை கடைப்பிடிக்கும் கியூபா ஓர் படி இறங்கி உள்ளதாகவே அரசியல் அவதானிகள் இந் நிகழ்வை கணித்தனர். மேலும் பொருளாதார வளர்சியை வேண்டி நிற்கும் இந் நாடு, சர்வதேச சமுதாயத்தில் இருந்து ஒதுங்கி இருக்க முடியாது. கியூபா தனது பொருளாதாரக் கொள்கைகளில் மேலும் தளர்வை ஏற்படுத்தும் என்றே பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். விரும்பியோ விரும்பாமலோ சந்தைப் பொளாதாரம் நோக்கி கியூபா நகர்வது தவிர்க்க முடியாதது. இவை எல்லாவற்றிற்கும் மேல் கஸ்ரோவிற்கு பின், கொள்கையை முன் எடுக்கக் கூடிய, ஆளுமை உடைய தலைவர் வருவாரா என்பது சந்தேகமே. அப்படி வராவிட்டால் கியூபாவின் சோசலிசம் கஸ்ரோவுடன் மறைந்துவிடுவது தவிர்க்க முடியாதது.

இன்று மேற்குலகிற்கு எதிர்க்க அமர்ந்திருக்கக் கூடிய ஒரே நாடாக சீனாவே உள்ளது. ஆனால் இன்று சீனா தன் நிலையில் உறுதியாக இருப்பதற்கு அது கடைப்பிடித்த சோசலிச தத்துவத்திலும் சீனர்களின் தேசிய உணர்ச்சியே காரணமாகும். இதனை பெல்கிரேட்டில் உள்ள தமது தூதரகத்திற்கு நேட்டோ நாடுகள் தாக்கிய (தவறுதலாக) போது காட்டிய எதிர்ப்பு வெளிப்படுத்தியது. ஒரெ நாட்டில் இரு வேறுபட்ட பொருளாதாரக் கொள்கைகளை கொண்டுள்ளது சீனா. கோங்கொங்கில் சந்தைப் பொருளாதாரமும் பிரதான நிலப்பரப்பில் சோசலிச பொருளாதாரத்தையும் கொண்ட இரட்டை பொருளாதார நாடான சீனா இன்று மெல்ல மெல்ல சந்தைப் பொருளாதாரம் நோக்கி நகர்கிறது.

50வது ஆண்டுக் கொண்டாட்டங்களில் அமெரிக்க பல்தேசியக் கம்பனிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. போயிங், கொக்கோ கோலா, ஜென்ரல் மோட்டோர்ஸ், வ்போர்ட், ரோயாட்டா ஆகிய நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட நூற்றுக் கணக்காண நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர். அன்று மிகபெரும் மாகா நாடும் இடம் பெற்றது. ஆனால் ரஷ்யாவைப் போன்று கட்டுப்பாடு இன்றி தனது சந்தையை திறந்துவிட்டு உடைந்து விடாமல் மிகவும் அவதானமாக தனது காய்களை நகர்த்துகிறது. அடுத்த கட்டமான சோசலிச நவீனமயமாக்கலில், சீனா சோசலிசத்தை எப்படி நவீனமயமாக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். நவ சோசலிச சீனாவா? அல்லது அமெரிக்க சீனாவா?

# புகைபிடிப்பவர் கவனத்திற்கு!

## உங்கள் கலவியின்பம் சந்தேகமே?

(அமெரிக்கா, 18 ஒக்) - புகைபிடிக்காதவர்கள் புகைபிடிப்பவர்களை காட்டிலும் கலவியின்பத்தில் மிகவும் மகிழ்ச்சி அடைவதாக American Institute of Andrology நிறுவனம் தெரிவித்துள்ளது. இவ் ஆய்வை மேற்கொண்ட Mr Panayiotis Zavos, இதில் உள்ள இரசாயணத் தொழிற்பாட்டை முழுமையாக தங்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை என்று தெரிவித்திருக்கிறார். இவர் மேலும் கூறுகையில் சிகரெட்டில் உள்ள இராசாயணக் கூறுகள் விந்து உற்பத்தியை பாதிப்பதால்; புகைபிடிக்கும் ஆண்கள் கலவியின்பத்தை முழுமையாக அனுபவிக்க முடிவதில்லை என்கிறார். புகைத்தல் உடலின் வெவ்வேறு தளங்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் அது பாலியல் தூண்டலையும் திருப்தியையும் பாதிக்க வாய்ப்பு இருப்பதாகவும் அவ் ஆய்வாளர் குறிப்பிட்டு உள்ளார்.

24 - 36 வயதுவரை உள்ள 300 பேரைக் கொண்டு இவ் ஆய்வு நடாத்தப்பட்டது. இதில் புகைபிடிப்பவர்கள் ஒரு நாளைக்கு 30 சிகரெட்டிற்கு மேல் பிடிப்பவர்களாகவும் கடந்த 7 வருடங்களாக இப் பழக்கத்தை கொண்டவர்களாகவும் இருந்தனர். இவர்கள் தமது கலவியின்பத்தை 1 (மிக மிக குறைந்த இன்பம்) - 10 (அதி உச்ச இன்பம்) என்ற அளவுத் திட்டத்தில் கணிக்க கேட்கப்பட்டனர். புகைபிடிப்பவர்களது கலவியின்பம் 5 ஆக பதிவுசெய்யப்பட்டது. மாறாக புகைக்காதவர்களது கலவியின்பம் அதினிலும் கிட்டத்தட்ட இரட்டிப்பானதாக 9ஆக இருந்தது. மேலும் புகைத்தல் கருவளத்தை பாதிக்கும் என்று முன்னைய ஆய்வுகள் வெளிப்படுத்தியிருந்தமை யாவரும் அறிந்ததே.

## இலஞ்சம் !!! ஓர் கணிப்பு

(இந்தியா, 20 ஒக்) - இன்று பல நாடுகளில், குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில், இலஞ்சம் அன்றாட வாழ்க்கையில் ஓர் அங்கம் ஆகிவிட்டது. சமந்தரமாக பரவியுள்ள இலஞ்ச முறையானது, கீழ் மட்டத்தில் இருந்து மேல்மட்டம் வரை பரவியுள்ளது. Indian Merchant Chamber நிறுவனத்தின் தலைவர் ராம் காந்தி இலஞ்சப் பரவல் பற்றி கூறுகையில் "2010ல் ஓர் இலஞ்சமற்ற இந்தியாவை உருவாக்கினால் இந்தியாவின் அப்போதைய குடும்பத்தின் சராசரி வருமானம் 22% ஆல் அதிகரிக்கும்" என்று தெரிவித்தார்.



The best deal in the town
nearly 1/2 price
785 HARROW ROAD, SUDBURY,
WEMBLEY

# சோனியா! நீங்கள் மறுமணம் செய்து கொள்வீர்களா?

# சோனியாவுடன் நேர்முகம்

(The Sunday Telegraph (26 செப்) பத்திரிகை, Julian West ற்கு சோனியா காந்தி அளித்த பேட்டி) இந்திய ஆங்கிலச் சஞ்சிகை ஒன்றில் மோன லீஸா என வர்ணிக்கப்பட்டவர்; காந்தி குடும்பத்தின் மருமகளும் விதவையுமான சோனியா காந்தி. இத்தாலிய குடும்பப் பெண்ணான சோனியாவின் அடையாளக் குழப்பம் நடந்து முடிந்த தேர்தலில் பெரும் முக்கியத்துவத்தை பெற்றது. 53 வயதிலும் கவர்ச்சியாகவும் மிக இளமையுடனும் தோற்றமளிக்கும் சோனியா; இந்தியாவின் 113 வருட வரலாறு கொண்ட காங்கிரஸை வழிநடத்துகிறார்.

இவருக்கு துணையாக 30 வயது நிரம்பிய மகன் ராகுலும் 27 வயது நிரம்பிய மகள் பிரியங்காவும் உள்ளனர். இலண்டனில் பயிலும் மகன் ராகுல் கொலம்பியன் இளம் பெண்ணுடன் காதல் கொண்டுள்ளார். மகள் பிரியங்கா பெரும் வர்த்தகர் ஒருவரை மணந்து இந்தியாவிலேயே இருக்கிறார். தாய்க்குப் பின் இவர் காங்கிரஸ் தலைவியானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தப் பின்னணியுடன் பேட்டி அமைந்தது.

கே : நீண்டகாலம் அரசியலுக்கு வராது ஒதுங்கியிருந்த நீங்கள் ஏன் உங்கள் முடிவை மாற்றினீர்கள் ?

சோ : மக்கள் என்னிடம் வந்து கெஞ்சி மிகுந்த அன்புடன் கேட்கும் போது என்னால் மறுக்க முடியவில்லை. அதனால் அவர்களிற்காகவும் இக் கட்சியை கட்டிக்காத்த நேரு குடும்பத்தை நான் சேர்ந்தவளாதலாலும் அரசியலில் ஈடுபடும்படி ஆகியது.

கே : உங்கள் கணவர் ராஜீவும் மாமியார் இந்திராவும் திட்டமிட்டு கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இன்று உங்களிற்கு இந்தியாவிலேயே அதிஉச்ச பாதுகாப்பு வழங்கப்பட்டு உள்ளது. இது ஒன்றும் உங்களிற்கு பயத்தை கொடுக்கவில்லையா?

சோ : பயமா? நான் எதற்கு பயப்பட வேண்டும்.

கே : உங்கள் அடையாளம் சர்ச்சைக்கு உள்ளாகி உள்ளதே அது பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

சோ : இது ஓர் கவனிக்கத்தக்க பிரச்சனை தான். எனது உடன் பிறந்த சகோதரியே நான் ஓர் இந்தியப் பெண்ணாக மாறியதை நம்பவில்லை. என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாதிடுவாள். ராஜீவின் மறைவுக்கு பின் தான் அவளால் என்னை புரிந்து கொள்ள முடிந்தது.

கே : இத்தாலியில் இளமையை அனுபவித்த நீங்கள் எப்படி இந்திய மருமகளாக ஆக முடிந்தது?

சோ : நான் 30 வருடங்கள் இங்கு வாழ்ந்து விட்டேன். நான் இப்போது ஓர் இந்தியனாகவே என்னை உணர்கிறேன். ஆனால் எப்படி சொல்வது என்று தெரியவில்லை. எனது வாழ்க்கையில் மிகுந்த மகிழ்ச்சியையும் மிகுந்த துக்கத்தையும் அனுபவித்துவிட்டேன். எது எப்படி ஆயினும், எனது பயணம் நேரு குடும்பத்துடன் இணைந்து தான் இருக்கும்.

கே : நீங்கள் எப்போதாவது மறுமணம் செய்வது பற்றி எண்ணுவீர்களா?

சோ : எனது கணவரை தவிர வேறு எவரையும் என்னால் காதலிக்க முடியாது.

கே : உங்களால் அரசியலில் இருந்து விலக முடியுமா?

சோ : ஆம்.

கே : நீங்கள் அரசியலில் இருந்து விலகுவீர்களா?

சோ : நிச்சயமாக. நான் ஓர் விடயத்தை செய்ய எண்ணினால் நான் அதனுடன் அதனூடாகச் சென்று முடிப்பேன்.

நன்றி : The Sunday Telegraph

## சட்டம் நிறம்..... Contd.

நிறுத்திவிட்டதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் இது ஓர் முதல் வழக்கல்ல. கடந்த ஆண்டு பிரித்தானிய இளம் பெண் லூயிஸ் வூட்வேட்டிற்கு எதிரான வழக்கும் இதே தன்மையானதே. ஆனால் லூயிஸ் வூட்வேட்டினுடைய இளமை கவர்ச்சிகரமான தோற்றம், அவருடைய நிறம் ஆகியன அவரிற்கு தொடர் சாதனங்கள் மூலம், பெரும் அனுதாப அலையை பெற்று கொடுத்ததுடன் விடுதலையையும் பெற்றுக் கொண்டார். இங்கு பசுற்றாவிற்கும் வூட்வேட்டிற்கும் இடையே உள்ள வித்தியாசம், முன்னையவர் இன்னமும் தன்னை நிரபராதி என்றே வாதிடுகிறார்; பின்னையவர் தான் குற்றம் இழைத்ததை ஒத்துக் கொண்டார். பிரித்தானியாவில் இதே குற்றம் சுமத்தப்பட்ட 13 வயது இளம் பெண்ணின் பெயரில் இருந்து குற்றம் நீக்கப்பட்டு உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பசுற்றாவின் குடும்பம், தீர்ப்பு நியாயமற்றது என்றும் அமெரிக்க சட்டம் இப்படி இனவேறுபாடு காட்டுவதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். தாம் மேன்முறையீடு செய்து தமது நியாயத்தை நிலைநாட்டுவோம் என்றும் கூறியுள்ளனர். அமெரிக்காவிலேயே சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட போதிலும், அவர் தண்டணையை பிரித்தானியாவில் அனுபவிக்க பிரித்தானிய தூதரகம் அமெரிக்காவுடன் பேச்சுக்களை நடத்தி இருந்தது. ஆனால் அவரை இப்போது வேறு மாநில சிறைக்கு மாற்றி, அவருடைய உறவுகளில் இருந்து பிரித்துள்ளனர். பசுற்றா குடும்பம் பொய்யான காரணங்களை கூறி தஞ்சம் பெற்றதால் அவர்கள் அமெரிக்காவில் வதியும் உரிமையை இழந்து உள்ளனர். பசுற்றாவின் கணவர் பிரித்தானியா வந்துவிட்டார்.

இவ் வழக்கு மேன்முறையீட்டிற்கு செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் குழந்தையின் தாய் மீதும் ஆரம்பத்தில் சந்தேகப் எழுப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேன்முறையீடு தொடருமானால் அமெரிக்க சட்டவாக்கம் பற்றி பலத்த கேள்விகள் எழுப்பப்படலாம். இனரீதியான வழக்கில் ஜுரிகளிடையே இன சமமின்மை இருந்ததும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் அமெரிக்காவில் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்துக் கணிப்பு, உண்மையில் தவறு செய்யாத ஒருவரின் முகத் தோற்றம் கவர்ச்சிகரமாக இல்லாவிட்டால், அவர் குற்றவாளியாக கணிக்கப்படுவதற்கு 10% வாய்ப்பு கூடுதலாக உள்ளதாக கூறுகிறது.


முத்துக்கள், சுத்தமான நவரத்தினக்கற்கள்,
சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின மோதிரங்கள் ஓடர்களுக்கு செய்து கொடுக்கப்படும்.
பொன்னுருக்கலுக்கு ஏற்ற சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.
உங்கள் எண்ணங்கள் எங்கள் கை வண்ணத்தில்



ROYAL JEWELRY

றோயல் ஜுவலரி
287, HIGH STREET NORTH
EASTHAM - MANOR PARK
LONDON E12 6SL
Tel: 0208 472 5500

## "அன்பு, அறம், அருள் இவையே புது யுகத்தை அழிவிலிருந்து காக்கும்"

# அன்னை காயத்ரி உடன் நேர்முகம்

இம் மாதம் நாம் புதிய நூற்றாண்டில் கால் அடி எடுத்து வைத்து உள்ளோம். இந்த 21ம் நூற்றாண்டு மனிதன் பற்றி பல எதிர்வு கூறல்கள் வெளியிடப்பட்டு உள்ளது. அதில் மிக முக்கியமான ஒன்று, அடுத்த 200 ஆண்டுகளில் (எமது பேரக் குழந்தைகளின் பிள்ளைகள்) மரணத்தை வெல்வார்கள் என்பது. மறுபுறம் இயற்கை சீற்றங்களும் விஞ்ஞானம் உருவாக்கிய அழிவுகளும் அவ் எதிர்வு கூறல்களை கேள்விக்கு உள்ளாக்குகின்றன. ஓர் சராசரி மனிதனான எனக்கு விஞ்ஞானத்திற்கும் மெய்ஞானத்திற்கும் இடையே உள்ள இணைவும் பிளவும் குழப்பத்தையே ஏற்படுத்துகிறது.

எனக்கு எழுந்த சந்தேகங்களை தெளிவுபடுத்திக்கொள்ள 0208-9525677ல் தொடர்பு கொண்டு அன்னை காயத்ரியை புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எட்ச்வெயர் காயத்திரீ அம்மன் ஆலய ஸ்தலத்தில் சந்தித்து கேட்ட போது - பொறுமையுடன் அவர் அளித்த பதில்களின் சாரத்தை, வாசகர்களின் தேவை கருதி பிரசுரிக்கிறோம்.



அன்பு மக்களிற்கு, நல்லாசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக என்று மகிழ்ச்சியுடன் வாழ்த்தியதுடன் அச் சந்திப்பு ஆரம்பமானது. ஆண்டவன் அருளினால் பல வருடங்களை காலங்களை கடந்து ஓர் புது யுகத்தில் அடி எடுத்து வைத்து உள்ளோம். இனிமேலும் ஆண்டவன் அருளுடன் பல காலங்களை காணுவோம் என்று மீண்டும் இறைவனை வேண்டி என் கேள்விகளிற்கு பதில் தந்தார்.

கே: விஞ்ஞானத்திற்கும் மெய்ஞானத்திற்கும் உள்ள மோதல் நிலை இந்த நூற்றாண்டிலும் தொடர்கிறது. மெய்ஞானத்தை விஞ்ஞானம் தாண்டி வேகமாய் செல்லும் என்கிறார்களே; அது பற்றி மெய்ஞானியான நீங்கள் மக்களிற்கு என்ன கூற விரும்புகிறீர்கள் ?

அன்னை: எத்தனை காலங்கள் யுகங்கள் உருண்டு ஓடினாலும் தெய்வ சக்தியினால் தான், எல்லா ஜீவன்களும் இயங்குகின்றன. இதனை விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்டு இருக்கின்றது. விதியின் அனுபவத்தினாலும் இதனை உணர முடியும். அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது. விதியை மதியால் வெல்ல முடியும் என்பார்கள் சில பேர் ஆனால் அது தவறு. விதியை மதியால் வெல்ல முடியாது; ஆனால் இறை அருளினால் வெல்ல முடியும்.

கே: உங்கள் இறை பணிகளில் ஒன்றாக, இப் போது நீங்களும் உங்கள் துணைவரும், பல சிரமங்களின் மத்தியில் இவ் ஆலய நிர்மாணத்தை வெற்றிகரமாக பூர்த்தி ஆக்கி உள்ளீர்கள். ஆலயங்கள் மூலம் மக்களிற்கு எவ்விதமான சேவைகளை அளிக்க முடியும் என கருதுகிறீர்கள் ?

அன்னை: ஆலயங்கள் பணம், பொருள், புகழ் போன்ற பொருளியல் (Materialism) தேவைகளை வழங்குவதில்லை. ஆனால் ஆலய வழிபாட்டின் மூலம் இறை அருள் கிட்டும். இவ் இறை அருள் பொருள், செல்வம், புகழ் எல்லாவற்றையும் பெற்று தரும். அத்துடன் ஆலயங்கள் மனிதனுடைய ஆன்மீக தேவைகளை பூர்த்தி செய்கின்றன. மேலும் பசியுடன் வருவோரிற்கு அன்னமிடுகின்றன. புலம்பெயர் நாடுகளில் இந் நிலை இல்லை. இங்கு ஆலயங்கள் ஆன்மீக கல்வியை வழங்க ஏற்பாடு செய்ய முடியும். கலைகளையும் கலாச்சாரத்தையும் வளர்க்க முடியும்.

கே: இறை நம்பிக்கை உடைய ஒருவர் ஆலயத்திற்கு செல்லாமல், வீட்டிலேயே தனது வணங்குதலை மேற்கொள்வது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள் ?

அன்னை: பசுவினுடைய உடல் பூராவும் பாலாக வருகின்ற குருதி ஓடிய போதும் பசுவின் மடியில் மட்டுமே பாலை கறக்க முடியும். அது போலவே இறைவன் எங்கும் வியாபித்து இருந்தாலும் சிறப்பாக ஆலயங்களே அருள் பெற சிறந்த இடமாகும். ஆலயங்கள் புனிதமானவை. வீடுகள் அப்படி அல்ல. மேலும் ஆலயங்கள் மன அமைதியை தருவதுடன், மனதை ஒருமுகப்படுத்த உகந்த சூழலை அளிக்கின்றது. இவற்றை எல்லாம் வீட்டில் பெற முடியாதே. ஆகையால் தினம் தினம் அல்ல வாரா வாரம் அல்ல மாதம் ஓர் தடவை ஏனும் ஆலயம் சென்று வழிபடுவது ஆன்ம ஈடேற்றத்திற்கு நன்று. இதனையே "ஆலயம் தொழுவது சாலவும் நன்று;"என்று முன்னோர்கள் கூறிவைத்து உள்ளனர்.

கே:மலர்ந்து உள்ள புதிய நூற்றாண்டு எப்படி அமையும் என உங்கள் சிந்தையில் தோண்றுகிறது ?

அன்னை: இப் புதிய நூற்றாண்டு பொதுவாக பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். இதனை நூற்றாண்டின் ஆரம்பமே கோடி காட்டி உள்ளது. செச்னியாவில் யுத்தம், நோர்வேயில் புகையிரத விபத்து.............. இப்படி பல அசம்பாவிதங்கள். 2005, 2016, 2025 ஆகிய ஆண்டுகளில் மிக பாரதூரமான சீரழிவுகள் ஏற்படும்.

கே: இதனை மனித சமூகம் எப்படி எதிர் கொள்ளும் ?

அன்னை: அன்பும் இறை பக்தியும் மட்டுமே இவ் உலகை உய்விக்கும்.

கே: இவ் உலகில் பல மதங்கள் உள்ளன. ஒவ்வோர் மதமும் ஒவ்வோர் வழிமுறையை சொல்கின்றன. இம் மத வேற்றுமைகளை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள் ?

அன்னை: ஆதியும் அந்தமும் அற்ற அரும்பெரும் ஜோதி தான் கடவுள். அந்த ஜோதிக்கு வழங்கப்பட்ட வடிவங்களும் சின்னமும் தான் இன்றய மத வழிபாட்டு உருவங்களும் மத இலச்சினைகளும். இவையே இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ, சீக்கிய, யூத.......... மதங்கள்.

உங்களை சந்திக்கும் இந்த வாய்ப்பிற்கு மிகவும் நன்றி. நீங்கள் மக்களுக்கு என்ன தெரிவிக்க விரும்புகிறீர்கள் என கேட்டு இச் சந்திப்பை நிறைவுபடுத்தினேன்.

அன்பு, அறம், அருள் இவையே புது யுகத்தை அழிவிலிருந்து காக்கும். எமது அனைத்து கஷ்டங்களையும் தெய்வீகத்தினாலும் அன்பினாலும் அறத்தினாலும் களைந்து ஜென்ம விமோசனம் பெறுவோம்.

- அன்னை காயத்திரி

# உதயனின் கோணத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் வாழும்.

எமக்கு என சுயநிர்ணய உரிமை உள்ள தமிழ் தேசம் வரும்வரை; எம் புலம்பெயர் வாழ்வில் தமிழை வளர்க்க நாம் உழைக்க வேண்டும். □தமிழை மறந்தான் தாயை மறந்தான்" என ஒப்பிடுவார்கள்; அது புலம்பெயர் வாழ்வில் இன்று நிருபணமாகிவருகிறது. நீங்கள் பிள்ளைகளிற்கு தமிழை ஊட்டும் போது அதனுடன் சேர்த்து பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் ஊட்டுகிறீர்கள். இன்று நீங்கள் தமிழை ஊட்டவில்லை என்றால் உங்கள் வயோதிப காலத்தில் தாய் தந்தையர் தினங்களிற்கு மட்டும் உங்கள் பிள்ளைகளின் பூச்செண்டு வரும் ஆனால் பிள்ளைகள் வரமாட்டார்கள். இன்னும் 25 வருடங்களில் வரலாறு இடம் கொடுத்தால் இப் பகுதியை மீண்டும் நாம் பிரசுரிப்போம். நீங்களே அப்போது உங்களை மதிப்பீடு செய்து கொள்ளுங்கள்.

உதயனை வெளியிட நம்மை தூண்டிய காரணிகளில் இது முக்கியமான ஒன்று. மேலும் உதயன் தமிழ் மக்களை பாதிக்கும் அனைத்து விடயங்களையும் பிரதிபலிக்கும். இது ஓர் இலவச இதழ். இதன் முழு பயன்பாட்டையும் நீங்கள் பெற்று கொள்வதும்; இவ் இதழை நீங்கள் உங்கள் நண்பர்கள் உறவினர்களிற்கு அறிமுகப்படுத்துவதும் எமது வளர்ச்சியை ஊக்குவிக்கும். மேலும் வாசகர்களாகிய உங்களின் அபிப்பிராயங்கள் பத்திரிகையின் தரத்தை உயர்த்துவதில் நிச்சயம் முக்கிய பங்காற்றும். எம்மை ஊக்குவிப்பது உங்கள் கரங்களில் உள்ளது. தம் உள்ளே தேடலுள்ள சமூகத்தால் தான், சிறந்த படைப்புகளை உருவாக்கி வரலாற்றில் முதன்மை பாத்திரம் எடுக்க முடியும். பரந்துபட்ட தேடலுடன் இப்பயணம் ஆரம்பிக்கிறது. உங்கள் ஆதரவுடன் நாம் வரலாற்றில் முதன்மை பாத்திரம் பெறுவோம் என்று கூறி; மீண்டும் எமது நூற்றாண்டு வாழ்த்துக்களை கூறி; அடுத்த இதழில் சந்திக்கும் வரை விடைபெறுகிறேன்.


WEMBLEY GREETING CARDS LIMITED
(CASH & CARRY)
WHOLESALERS OF GREETING CARDS, STATIONERY & TOYS
உங்களின் பிறந்த தினமா. திருமண நாளா. மற்றும் ஏனைய வைபவ"களுக்கும் தெவையான அனைத்துப் டிபாருட்களுக்கும். மலிவாக. தரமாகப் டிபற்றிட ஒரெயிடம்.'.
WGC
*Plastic cutlery, Plates, Bowls, Spoons, also party/weddings decoration*
*Open from Monday to Friday - 10a.m to 8p.m Saturday Closed Sunday - 10 a.m to2 p.m*
WEMBLEY STADIUM INDUSTRIAL ESTATE
FIRST WAY WEMBLEY MIDDLESEX HA9 0TU
Tel: 0181 903 8990
Fax:0181 903 5812

# கனடாவில் நிகழ்ந்த கோரம்.... Contd.

சம்பவம் நடந்து 6 மாதங்களிற்கு பிற்பாடு, எலும்புக் கூடுகள் மட்டுமே கண்டு எடுக்கப்பட்டு உள்ளது. இக் காலத்திற்குள் தடையங்கள் அழிந்து போய்விடும் என்று குற்றவாளி எண்ணலாம்; ஆனால் குற்றவியல் விஞ்ஞான ஆய்வாளர்களிற்கு இது ஓர் புதிய விடயம் அல்ல. "குற்றவாளி எவ்வளவு தான் திறமை வாய்ந்தவனாக இருந்தாலும்; அவன் தன்னை அறியாமல் ஓர் தடயத்தை விட்டுச் செல்வான்"; இது குற்றவியல் விசாரணையின் ஓர் எடுகோள். இன்றைய குற்றவியல் விஞ்ஞானம், குற்றவாளியின் ஓர் தலை மயிரை வைத்தே குற்றவாளியை அடையாளம் காட்டும் அளவிற்கு வளர்ந்து உள்ளது. ஆனால் எவ்வளவு விரைவில் குற்றவாளி இனம் காணப்படுவார் என்பது தான் கேள்விக்கு உரியது.

செல்வி சாமினியின் கொலைக்கான காரணம்? கொலை செய்தவர் சாமினிக்கு தெரிந்தவரா? பாலியல் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டாரா? உட்படுத்தியிருந்தால், இதே மாதிரியான வேறு சம்பவங்கள் நடந்து உள்ளதா? போன்ற தொடரான கேள்விகளிற்கு விடை தேடப்படுகின்றது. இவர் எப்படி கொல்லப்பட்டார் என்பது விரைவில் தெரியவரும் என்று நம்பப்படுகிறது. அது தெரிய வந்தால் மேலுள்ள பல கேள்விகளிற்கு விடைகிடைக்கும். மேலும் இக் கேள்விகளிற்கு விடை தெரியும் வரை, சாமினியை சூழ இருந்தவர்கள் மீதான விசாரணைகள் தொடரும் என தெரிகிறது. தமிழீழத்திற்கு வெளியே ஈழத்தமிழர் மிக அதிகமாக வாழும் இரண்டாவது நாடு கனடா (முதலாவது தமிழ் நாடு). இங்கு தமிழ் குழுக்கள் தமக்குள் மோதி அழிவது சாதாரண நிகழ்வு. ஆனால் இவ் இளம் பள்ளி மாணவிக்கு நேர்ந்தது மிக கொடுமையானது. இக் கொலை முழுமையாக விசாரிக்கப்பட்டு குற்றவாளி தண்டிக்கப்படுவது, கனடியத் தமிழர்களின் பாதுகாப்பிற்கு இன்றியமையாதது.

# தமிழீழத்தில்.... Contd.

மொத்தமாக 31 வெளிநாட்டு மருத்துவர்கள், பாதிக்கப்பட்ட தமிழ் பகுதிகள் அனைத்திலும் பரந்து சேவைகளை வழங்குகின்றனர். அண்மையில் இடம்பெற்ற கடும் யுத்தத்தின் போதும் இவர்கள் அயராது தமது சேவையை வழங்கி உள்ளனர். முல்லையில் மாலாவி வைத்தியசாலையிலும், வவுனியாவில் முரங்கன் வைத்தியசாலையிலும், யாழ் போதனா வைத்தியசாலையிலும் இவர்கள் மருத்துவ சேவைகளை நடத்துகின்றனர். சிறுவர், பெண்களுக்கான விசேட மருத்துவ சேவையையும், நடமாடும் மருத்துவ சேவையையும், சத்திர சிகிச்சைகளையும், மகப்பேற்று மருத்துவ சேவையையும், சுகாதாரம், தொற்று நீக்கம் போன்ற சமூக மருத்துவ சேவையையும் (Occupational Therapy) வழங்குகின்றனர்.

MSF ன் தாபகர்களில் ஒருவரான பிரான்ஸின் முன்னாள் சுகாதார அமைச்சரும்; இன்று கொசோவோவில் ஐநாவின் செயற்பாடுகளிற்கு பொறுப்பானவருமான பேர்நாட் கோச்னர் "நான் இதையிட்டு மிகவும் உணர்ச்சிவசப்பட்டு உள்ளேன். ஆனால் அதே சமயம் இப் பரிசினுடைய அரசியல் முக்கியத்துவத்தையும் உணர்கிறேன்" என்று கூறினார். இவ் அமைப்பை சேர்ந்த ஒவ்வொருவரும் தமது உழைப்பிற்கு கிடைத்த இந்த சன்மானத்தை மிகவும் கொண்டாடுகிறார்கள். வழமையாக தனிநபர்களிற்கே வழங்கப்படும் இப் பரிசு இரண்டாவது தடவையாக ஓர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு உள்ளது.

MILITARY T/SHIRTS • URBAN CAMOUFLAGE • COMBAT TROUSERS

HARTEX

ESTABLISHED 1969




55 Victoria Road
Ruislip Manor
Middlesex
HA4 9BS
Tel. 01895 634244

321 Northolt Road
South Harrow
Middlesex
HA2 8JA
Tel. 0181 864 3333

OPEN 7 DAYS

URBAN CAMOUFLAGE • MILITARY T/SHIRTS • FIELD JACKETS • WAISTCOATS • COMBAT TROUSERS

WAISTCOATS • FIELD JACKETS • MILITARY T/SHIRTS • URBAN CAMOUFLAGE • COMBAT TROUSERS

NOORI Foods

793 Romford Road, Manor Park, London E12 5AN

Tel: 0181 514 8999

Fax: 0181 478 1441

NOORI HALAL BUTCHERS

328 High Street North, Manor Park, London E12 6PH

Tel: 0181 472 1655
0181 472 1667
0181 472 1677